462

462

ஓம்

ஸ்ரீ இரெட்டியபட்டி ஸ்வாமிகள்

குருநாதர்

OFFICE OF THE REG...
8 DEC ...
MADRAS

மதராஸ் லா ஜர்னல் பிரஸ்,

திருபுவனம் : : திருவிடைமருதூர்

1947

Q:417
N47
112907

குருநாதர்

தோத்திரப் பாடல், அருட்பாடல், வரலாறு.

சுவாமி: **M.** ராஜு B. O. L.

எழுதியது

மதராஸ் லா ஜர்னல் பிரஸ்

திருபுவனம்

1947

முதற் பதிப்பு: 1947

உரிமை பதிவு

விற்பனை உரிமை பெற்றவர்:—

M. ராஜு பிள்ளை B. O. L.

யுனைடெட் கார்பொரேஷன் லிமிடெட்,

திருவிடைமருதூர்.

112907

ஓம்



ஸ்ரீ இரெட்டியபட்டி ஸ்வாமிகள்

உ

கணபதி துணை

ஓம் இரெட்டிய பட்டி சுவாமிகள்

இரெட்டிய பட்டி சுவாமிகள் வழி பாட்டுப் பாக்கள்

திருப்பாதிரிப்புலியூர் திரு சிவசண்முக
மெய்ஞ்ஞான சிவாசாரிய
அடிகளார் பாடியன.

அகவற்பா

பூந்தா மரைவதி புங்கவன் பிரமன்
படைத்திடு உலகில் படர்ந்த புண்ணியத்தான்
மானுடப் பிறவி மன்னிய உயிர்கள்
அறமுதல் நான்கும் அடைந்து உய்ந்திடுவான்,
கருணைகொள் பரமன் கருமணி கண்டன்
அன்பே வடிவாய் அமர்ந்திடு பரமன்
சச்சிதா நந்த தனிப்பெருஞ் சோதி
முத்தன், பத்தர் முழுமலம் போக்கிப்
பரஞா னந்தரு பரையொரு பாகன்
தூம்புடை எயிற்றுப் பாம்பணி சித்தன்,
அழிவில் இன்ப அருளுருக் கடவுள்,
மானைக் காட்டி மான் பிடிப்பது போல்
மானுட வடிவ வள்ளல் என்ன

குற்றம் போக்கும் குருபரன் என்ன
ஞானம் நல்கும் நாதன் என்ன
ஊனம் ஒதுக்கும் உத்தமன் என்ன
ஆதி அகற்றும் ஆப்தன் என்ன
நோயினை நீக்கும் நுண்ணியன் என்ன
பிறப்பை யழிக்கும் பிஞ்ஞகன் என்ன
இன்னன பலவா இயம்பிப் போற்ற
வருவன் என்ன, வந்திடு மறைகள்
சொல்லுவது உண்மையாத் துணிந்து,
[அடியேங்கள்
வாழ, இத்தரையில் வந்த சற்குருவே,
செந்தா மரைவதி செம்மல் செய் உலகில்
மக்களாய்ப் பிறந்தோர் வாய்த்திடும் நலங்கள்
அறம், பொருள், இன்பம் அமலவீடு என்ன
நான்கென அறைவர், ஞானஞ்சேர் பெரியோர்!
அந்நலம் நான்கில் அழிவில் வீடே
மேலாக் கொள்வது விவேகிகள் கடமை
அந்நல் வீடும் அமல ஞானங் கொடே
பெறுதல் வேண்டும் பேதைமை யகற்றும்
ஞானமும் இணையில் மான் அமர்கையன்
வலமழு அமர்ந்த வள்ளல், இளமதி
கங்கை யரவு களத்து வாழ் சடையோன்
அடியவர்க் காக அருளில் யமனை
உதைத்து, தன்னை உற்றவர் அடையும்

நலமது தெரிந்த நாதன் குருவாய்
வந்து உணர்த்திடின் அன்றி வந்திடுமோதான்
ஏனைய சிறுவளன் எல்லாம் எய்திப்
பிறந்து இறந்து அயரும் பெற்றியர், அடியேம்
ஞானங் கொண்டே நணுகும் சிவபதம்
பக்குவர்க் கேற்பப் பயன் துய்த்திடுவான்
அப்பரன் இந்த அவனியார் புகழும்
தமிழ்இளங் தென்றல் தக்க தரளம்
சந்தனம் இவற்றின் பிறப்பிட மாகும்
பாண்டிய நன்நாட்டில் ஈண்டிய நல்லோர்
கூடி யேத்துங் குறைவில் ரெட்டியப்
பட்டி நகரில் பகர் வேளாண்குலம்
விளங்கப் பிறந்த வீர பத்திரர்
ஆவுடை மங்கையர் ஆற்றிய தவத்தால்
ஞாலம் துதிசெய் நளவரு டத்தில்
திரட்டு மழைபொழி புரட்டா சியினில்
இரண்டாங் தேதி இரேவதி செவ்வாய்
மாண்பு மிக்க மகர லெக்கினத்தில்,
ஞானிக ளேத்த, நான்மறை துதிக்க,
மாதவர் வழுத்த, மன்னவர் பழிச்சப்,
புலவர் புகழப் பொருவருமற் றையோர்
துதிக்கத் தோன்றிய துணையில் செம்மை
அறிந்து துதிக்கும் ஆற்றல் இல்லேம்
எளியரேம் வினைகள் இல்லாது அகலக்

கடைக்கண் செய்க கருணை வாரிதியே!
பிறவிக் கடலில் மூழ்கி மூழ்கிப்
பேர்அஞர் உற்றேம்; பிறவா வண்ணம்
ஞானந் தன்னை நல்க எங்கட்கே
அறக்கலை முதலா அறைபல கலையும்
உணர்த்திடு திறத்தை உரைக்க எந்நாளும்
வாய்மை முதலா வகுத்திடு குணங்கள்
எங்கள் பாலிருக்க என்றும் அருள்செய்க
உடற்கு உறுநோய் பல உற்றிடா வண்ணம்
திரமருந் துதவித் திருத்திடல் வேண்டும்
காம மாதி கடும்பகை எல்லாம்
கனவிலும் வெல்லாக் கடுந்திறல் தருக
வாட்டமில் மனத்தை வகுக்க நல் அருளொடு
எய்ப்பில் வைப்பே இணையில் சற்குருவே
கணபதி கழற் கால் கமலம் அரணக்
கொண்டிடுவீர்! எனக் கூறுஞ் செம்மால்
தண்ணீர் தானே தருந்த மருந்தா
எந்த நோய் களையும் ஏகுவிக்கும்
வைத்திய நாத வள்ளால் போற்றி!
அட்டமா சித்துசெய் ஆண்டவ நீதான்
அறுபத்து ஆறே ஆண்டு இங்நிலத்தில்
விளங்கினே; பின்னர் விளம்பு துந்துபியின்
மார்கழி அனுஷம் மாண்புறு நாளில்
சோதியாய் விளங்குந் தூயவ னானாய்;

அன்றைத் தினங்கொண்டு அகத்தினில் உன்னி
வ:யான் வாழ்த்தி வணங்கி இம்மெய்கொடு,
பேறது பெற்றுப் பெருகு கின்றனமே
இயல்வது கொண்டே இயற்று பூசனையை
ஏற்று நாங்கள் இன்பம் எய்திடவே
அருள்செய் பரம குருவே! போற்றி!
பாட்டுறு ரெட்டிய பட்டிநகர் வாழ்
தேட்டக்குருவே! தெளிவுரு குருவே!
வாழ்க! வாழ்க! வள்ளலின் அன்பர்
வாழ்க! வாழ்க! வகையுளி என்றும்
வாழ்க! நின் தாமரை மலர்நிகர் அடியே!

திரண்டிடும் அடியார் தீவினை தீர்ப்பான்
திருவுருக் கொண்டஎம் சிவமே
அரண தரும் நின் தன் அடிமறை மலரை
அனுதினம் போற்றிசெய் கின்றோம்
இரண்டறக் கலந்து இன்புற அருள் செய்வாய்
இணையிலாது உயர்ந்திடு பவனே
முரண்படல் இல்லா இரெட்டிய ப்ட்டி
முதுநகர் வருகுரு பரனே. (1)
அன்பு செய்வார்க்கு வேண்டுவ தந்தே
அளித்திடு கருணையை உடையோன்
வன்பு செய்வார்க்கு மறக்கருணையினல்
வகைபடு நலம்வரச் செய்வோன்

முன்புபின்பு இல்லா முதல்வன் என்று இன்னும்
முழுமறை முழங்கிடு தலைவன்
நன்மனத் தவர்சூழ் ரெட்டிய பட்டி
நகர்தனில் குருவென வந்தோன் (2)
தரைபுகழ் வளஞ்சேர் ரெட்டியபட்டி
தனிநகர் வந்து அடியேங்கள்
உரைபுகழ் ஏற்றுஉன் கருணையை அளித்தாய்
உய்ந்தனம் உய்ந்தனம் என்றும்
வரைதனிற் சிறந்த கயிலையை விட்டு
வந்தனை தந்தனம் ஞானம்
குரைகடல் உலகில் கண்ணினில் கண்ட
குறைவிலாத் தெய்வ நீயன்றோ (3)
கண்டிடும் பொருள்கள் பற்பல வாயும்
காண்ஒணாப் பலபொரு ளாயும்
விண்டிட முடியாப் பல பொரு ளாயும்
வேறுமாம் பல பொரு ளாயும்
தொண்டரை யாளும் குருபர னையும்
துலங்கிடு சத்தியப் பொருளே !
மண்டலம் புகழும் ரெட்டிய பட்டி
வளநகர் குருபரா போற்றி (4)
கருத்தினுக்கு எட்டாக் கடவுளே உலகில்
கலங்கிடும் அடியரைக் காப்பான்
உருக்கொடு வருவர் எனப்பல நூல்கள்
உரைப்பன உண்மைஎன்று அடியேம்

தெரிந்திடத் தவர்சூழ் ரெட்டிய பட்டித்
திருத்தலம் செழிக்கவந் திடுவோய்
விரிந்திடு எங்கள் மனமிக ஒடுங்க
வெளிவரு குருபரா போற்றி. (5)

அடியார் ஒருவர் ஆண்டவன் அருளில்பாடியது

விருத்தம்

சந்தித்தே னுன்னையே சபலமுடன் என்மனம்
சஞ்சலித் திட்ட காலம்
சதாநின் னடிகளை சாசுவத மென்றனே
சந்தோஷ சாகரமே
சந்தேகமில்லை என தருமகுண நாதனே
சாதித்தே னுன்றனையே
சங்கர நிராதரா சற்குரு மூர்த்தியே
சமமத சங்கம் நீயே
சந்ததமும் நான்செய்வ தெல்லாமுனதருள்
சகலமு மறிந்த கோவே
சரணமென் றடையும் சிட்டரைக் காக்க வல்லவனே,
சச்சிதா னந்தசுகமே
சந்தர்ப்ப மறிந் தென்னை தடுத்தாட் கொண்டவெம்
சாந்தமுரு ரூபமுகனே
சஞ்சிதங் களைப்போக்கி தவயோகந் தந்திட்ட
சுவாமி ரெட்டியபட்டி நீயே

விஜயனே ஞானத்தை விளைவிக்கு நின்னருள்
விமலனே வேண்டுகின்றேன்
நிஜமாக நின்னடி நியமத்தினால் பலரும்
நிலைப்பவர்கள் நிஷ்டை என்றேன்
புஜபல முள்ளபலர் அரசர்க ளாயினும்
புகழ்வதுன் நாம மென்பேன்
கஜமுகனைக் கண்டுநீ கவலையை ஒழித்திட்ட
கழல் ரெட்டிய பட்டி இன்பே.

வாணியம்பாடியில் சுவாமிகளுக்கு நிகழ்ந்த உத்ஸவ வைபவம்

கீர்த்தனைகள்

'கேசவன் தேரிசனம்' என்ற மெட்டு

ஆனந்த பைரவி ராகம்

பல்லவி

தேவ விமான மீதுதானோ யெனப்பலரும்
திகைத் துரைத்தனர் மிகத் தேர்ந்தோர் (தே)

அனுபல்லவி

பாவமழிய பதமளிக்கும் பரம்ரெட்டிய
பட்டி சுவாமிகளும் பார்புகழ் மகோத்சவ (தே)

சரணங்கள்

துந்துபி வருடத்தில் துணையாடி மாதத்தில்
சுந்தரமாய் முடியும் சுக்கிர வாரமதில்
தந்தனர் சதுர்த்தியில் சாதுதரிசனம்
பந்தமறவே செய்யும் பகரொ[illegible]நாதம் (தே)
மல்லிகை முல்லைரோஜா மருவு [illegible]கொழுந்து
மணமுறும் சாமந்திகள் மாதளா[illegible]ரளி
அல்லி அசோகுடனே அலங்கரி[illegible]த விமானம்
துல்லிதமாய் பவனி துயிலெழ [illegible]லம்வந்த (தே)
வலமிகுந்தவர் நிறை வாணியம் பாடியதில்
நலம்பொருந்திய நாளில் நாத னருமையுடன்
பலவித கோஷங்கள் பகரொணாத அற்புதம்
பரமா னந்தங்கொண்டு பார்த்தவர் களித்திட (தே)

'காட்சி கண்காட்சியே' என்ற மெட்டு

பல்லவி

காட்சி கண்காட்சியே மாட்சிமையாம் உத்சவ
காட்சி கண்காட்சியே (கா)

அனுபல்லவி

ஆட்சியான ஜென்மபிணி சாட்சி காட்டி தீர்க்கவல்ல
காட்சி கண்காக்ஷியே (கா)

சரணங்கள்

துந்துபி வருஷத்தில் துணையாடி மாதத்தில்
பந்தமற முடியும் பகர்சுக்கிர வாரத்தில்
விந்தமுறும் சதுர்த்தி விளங்கு திதியதனில்
தந்தனர் சேவைமிக சாமி

சாது தாதா ரெட்டியபட்டி சாமி
நல்ல தருணமிந்த பூமி
வருவார் பலர் பாமி வாணியம்பாடி யாமி
வகையுடனே நேமி விமானம்வர வாமி (கா)
புகழ்பெறும் புதுடவுன் பிள்ளையார் கோயிலும்
இகழ்விலா ... னர் இருப்பதென நவிலும்
திகழ்வுறும் ... வத்தில் தேரிருேன் ஒயிலும்
தனகோபாலு ... ட்டியார் மனமுமுவந்து நின்று
என்குருநாதனே என்று, குறைகளகலவென்று
தாரணியதிலன்று தாமிதம் யாமென்று
பகர்ந்தனரே இன்றுதரும் விமானமென்று
செறிந்தார் மிகவுமின்று தகவுறும் நன்றென்று (கா)

'எப்போதான்' என்ற மெட்டு

சங்கராபரணம்: ஆதிதாளம்

பல்லவி

அப்பனே ஆதாரம் வேறுயாரும்
காண்கிலேனே ஐயனே (அ)

அனுபல்லவி

ஒப்பிலாத குருநாதா உயர்ரெட்டிய பட்டிசுவாமி
எப்போதும் என்னுள்ளந்தனி லிருந்திடுவாய்நீ (அ)

சரணம்

தப்பென்று தள்ளிடாதே தனையன் சிறுவனென்னை
இப்பொழுதே தந்தருள் இகபர சுகந்தன்னை
முப்பாமுந் தாண்டிட முகமலர்ந் தருள் செய்வாய் (அ)

'சீதாபதி' என்ற மெட்டு

ராகம் க்மாஸ் அடதாளம்

பல்லவி

இன்றேதானோ என் மீதி லுனக் கிதலெனு
மனமிரங்கிட்ட தின்றேதானோ (இ)

அனுபல்லவி

கன் றினம்போல் கதறினேன் நானே காருண்யனே
காத்தருளிதாகும் இன்றே தானோ (இ)

சரணம்

மன் றுள்ளாடும் மௌனவதாரா மகாதவமே
மானிலந் தன்னில்
நன்றேயுந்தன் நாமம் பகரில் ரெட்டியபட்டி
சுவாமி (இ)
வந்தாட்கொண்டு வரமளித்தாயே நொந்தலையு
கேயர்களையே
உந்தனரும் புகழ்தரும் பாதம் எந்தன் முன்னில்
என்றும் விநோதம் (இ)
வெந்தலந்தேன் வேதனை தீர்ப்பாய் வேறவே
வேண்டினே னுன்னை
சிந்தைதெளிந்தே சிறுவனும் கோறி சீருடனே
செந்தமிழ் சொன்னேன் (இ)

ராகம் 'இங்கிலீஷ் நோட்டு'

சின்மயனே என்ற மெட்டு

நன்குளமுள ரெட்டி பட்டி எந்தாய்
நலமுடனே பிறந்து வளர்ந்தாய்

புண்ணியனே அலைகடல் தனைக் கடந்தாய்
கண்ணியனே துறவறந்தனை அடைந்தாய்
அஷ்ட திசை களிலும் நடந்தாய்
அரும் போகந் தன்னையே பகர்ந்தாய்
இஷ்ட முள்ளவர்களுக்கே இசைந்தாய்
நிஷ்டையிலே வரவே துணிந்தாய்
நேரும் சீடர்கட்கே சிறந்தாய்
மீளும் துரியமதில் நிறைந்தாய்
கோறு சிறுவனுக்கே யுகந்தாய்
பாரில் மௌனகுரு வெனச் சிறந்தாய் (நன்குள) (5)

'மாத்தாடபரதேனே' என்ற மெட்டு ராகம் கமாஸ்.

பல்லவி

என்மீதிலேனோவாது எளியேன் நானே

அனுபல்லவி

நன்குறும் ரெட்டிய பட்டிநாதனே மேதினியில்
என்மீதிலேனோ வாது (என்மீது

சரணங்கள்

அன்புவைத் தெனையாள்குவாய் அரனவதார
பண்புடன் உனை வேண்டிப் பணிந்தேன்
பாலன் நானையா என்மீதிலேனோ வாது
கண்ணிய னுன்னையான் கடையேன் கருதுகின்றேன்
தண்யனைகச் செய்குவாய் தடுத்தாட் கொண்ட குருவே
நின்னரும் பாதங்களை நேமமுடனே நானும்
பன்முறை வேண்டினேன் பாடிப் போற்றினேன் கோடி
என்மீதிலேனோ வாது எளியே நானே (6)

'ஆறுமுக வடிவேலவனே' மெட்டு. காவடிசிந்து

ஆலமுண்ட ஈசனவதார மான என்னையனே
சுந்திரனே காலம் வீணுமோ தந்திரனே
ஆளவாரும் ரெட்டியபட்டி சாமியுனை பணிந்தேன்
மேலாம் நிரந்தரனே
நீலமெனு உருவைசாலவே யுடைத்த ஞாலம் புகழ்
மீள எனையாளும் குருவே [குருவே
காலனணுகிடு முன்னமென் கருமங்களைப் போக்கி
காத்திடுவாய் திருவே
பாலுநீரும்போல நீரு நானு மேகமாகக்கூடு நாளேதோ
பாபம் தீர்த்தெனை யாளொணுதோ
நாளுங் கோரும் சாமிஞத உனைத் துதித்தேன்
நீரும் ஜனனமேதோ (ஆலமுண்ட) (7)

'முருகன் திருமால் மருகன் பெருமை' என்ற மெட்டு.

பல்லவி

சரணம்புகு வோர்களை காத்திடுவாய் சமரசாதி
பதியே என்சாமி ரெட்டிய பட்டி
வரவே இது தருணம் எனையாள உருவே திருவே
குருவே தருவாய் நின்னருள் தாள்களை (சரணம்)

சரணம்

தீரும் ஜெனனமென்றே தொழுதே னுன்னைத் தேருதல்
சொல்வாயே
பாரும் பந்தமகலவே வந்தெனை யாட்கொண்ட பரமகிரு
பாநிதியே
கோரும் பாலன் நானே சீருடன் புகழ குவலயங்
செந்தமிழ் திகழ [தன்னில்

மீருமூனைப் பணிந்தேன் எனை ஆளவாரும் வரந்தாரும்
பதம் சேரும் என நாளும் பலர் (சரணம்) (8)

'விட்முசாயகவே' என்ற மெட்டு ராகம் கரகரப்பிரியா—.

ஆதிதாளம்

பல்லவி

வருவாயே நீதா னென்றன் னருமை யறிந்த குருவே
வருவாயே (வரு)

அனுபல்லவி

திருவே ரெட்டிய பட்டி சுவாமி பருவப்
பொருளே பணிந்தேனுனையே (வரு)

சரணம்

கருணாகரனே உன்னைச் சரணமென்றடைந் தேனே
குருவே பக்குவப் பொருளே போற்றி
மறுபிறவி யறவே கோரினேன் பாடி (வரு) (9)

'விரிந்த மார்பும்' என்ற திருப்புகழ் மெட்டு.

மதிமுகமே என மனதிடம மர்ந்திட மகிழ்வாயே
மருமானகர் ரெட்டிய பட்டியின் நாமமுரு நீயே
மானிலந் தன்னிலே வீணிலென் நாட்கள் மாறுமல்
மறைமாதவர் புகழும் மேதனை மடமை மேவாமல்
மிகவொளியுடனே திசைகள் அனைத்து மிதித்தோனே
மிடிமெலிந்திட வெனவே வுருவுனை பணிய
[மதித்தோனே
மீளவும் ஜெனனம் நீள விடாமல் முடிப்பாயே
முழு மூடனெனையே முகமலர்ந்தருளியெ மௌனியே
மெத்தவும் சித்திக ளுத்தமனே பெற மிகவாடி
மேலு மொழிந்தேன் சிறுவனு நானுமே யுனைப்பாடி
(மதிமுகமே என்மனதிட) (10)

'ஈதினமே சுதினம்' என்ற மெட்டு—ஆதிதாளம்.

பல்லவி

உன் சட்டத்தின் மகிமை என்னால் சொல்லத்தகுமோ
நன்குடனே யுரைத்தாய் நாளும் நதியிலாட
எண்திசைகளோடினும் மந்திரங்களே கூடா (உன் சட்)

சரணம்

சிதோஷ்ண சுகதுக்கமே தான் வருந்தினும்
சூதோ வகையிலாது போதோ மருந்துகூடா
ஏதோ கருமவினை தாதா உரைப்படியே
வாதோ அனுபவிப்பார் வரந்தர உறும் நல்ல
பாரில் பெரு நாகங்கள் நேரினும் ஆரண்யமாய்
சீரில் மிருகங்களும் நீரில் பயங்கரமாய்
கோரில் உனது நாமம் தாரில் யேகுமே தானும்
நேரில் புகழ்ந்தேன் மனமுகந்து ஆனந்தமாய்
உன் சட்டத்தின் மகிமை சொல்லத் தகுமோ

'இன்னும் பராமுகமா' என்ற மெட்டு. மோகன ராகம்-ஆதிதாளம்

பல்லவி

இன்னும் தடையேன் செய்குவாய்
எனக்கிங்கு துணையார் சொல்லுவாய்

அனுபல்லவி

எண்ணினேன் உன்னையல்லால் இடர் தவிர்ப்பாரில்லை
சன்னதம் ரெட்டிய பட்டிசாமி சதமென்றேனே (இ)

சரணம்

என்ன குறைகள் செய்தேன் இன்னு மென்மேல்
[வர்மங்களுய்ய
ஜன்மப் பிணியை யறுப்பாய் சிறுவன் சாமியை கோரி

கர்ம மகலப்பாடி கழலடிகள் பணிந்தேன்
(இன்னும் தடையேன் செய்குவாய்)

அடியார் ஒருவர் பாடியது ஆனந்தக்களிப்பு

தானன தந்தனன தன தந்தனன
தன தந்தன தானன தந்தனன
ஆதி குருவாக தோன்றி இந்த
அகில பிரபஞ்சங்கள் அனைத்துமே வாழ்க
நாதன் கிருபை சுரந்து இந்த
நானிலந் தன்னி லவதரித் தாண்டி (தான)

அவதரித் தாரென்று சொன்னேன்
அந்த ஐயன் கணேசன் அடியினைத் தொழுது
குவலயத் தோர்க ளறிய எந்தன்
கோமா னுதித்ததோர் கோலத்தைக் கேளாய் (தான)

கேளாய் நவகண்டம் தன்னில் அதிக
கிருபை பொருந்தும் பரத கண்டத்தில்
தாளாத செங்கோல் செலுத்த ஐயன்
தயவுடன் தக்ஷிண பாரிசந் தன்னில் (தான)

தக்ஷிணம் பாண்டிநாட் டெல்லை வளர்
திரு நெல்வேலி ஜில்லா நகருக் கடுத்த
திருவளர் ரெட்டியபட்டி தன்னில்
தானவ தரித்தாண்டி சைவ குலத்தில் (தான)

அவதரித்தது ஒரு காட்சி இந்த
அகிலமெல்லாம் பெரும் அருள் அரசாக்ஷி
புவனமெல்லாம் திருக்கண் காட்சி செய்ய
புண்ணியரவதரித்த புதுமை என் சொல்வேன் (தான)

சொல்லவுங் கூடுமோ நாவால் வேத
சுருதி யெல்லா மொரு திருவுருவாக
பல்லாயிரங் கோடி அண்டம்
பரவி நின்றதுபோல் பாவனை காட்டி (தான)

காட்டியே பூலோகந் தன்னில் வெகு
காட்சி பிரமாணங்கள் கதையாய் முடித்து
தாஷ்டீகமாகவே தோணி ஐயன்
சட்டம் ஒன்றுசெய்த சமர்த்தைபார் தோழி (தான)

பாராய் கணபதி தன்னை வலம்
பண்பாகஸ்நானங்கள் செய்து முடித்து
நேராக வெந்நீர் மருந்து கூடாதென்று
நெறியாய்ச் சுக்கிரவாரங்கள் கனிவாய்முடித்து (தான)

கனிவுடன் விரதங்களிலிருந்து முன்நேத்து
கடன்களை தெய்வத்திற் குறுதியாய் செலுத்தி இனி
நேர்ச்சை ஒன்றும் வேண்டாம் என்றும்
நிறைந்ததொரு தெய்வத்தை நினைந்து தான

நினைந்து விபூதி தரித்தால் வினை
நீராகிபோகுதென்ற நிச்சயம் பாராய்
அனந்தம் திருவிளையாட்டை ஐயன்
அன்பர்க்கு காட்டி அருள் செய்தார்பூராய் தான

அருள்செய்த தெய்வத்தை நாடு
அவரடியிணைகளை துதித்தானந்தம் பாடு
இருவினை பயனற்ற வீடு தன்னை
இன்பமாய் தருகின்ற ஏகனை நாடு தான

ஏகனென்றல்வ ஒரு முன்னுரைத்த தோரந்த
ரெட்டிய சுவாமி என்று கூறு
வேகமுடனே சென்றுபாரு ஐயன்
விளையாட்டை கவனிக்கமெய்யை நீசாறு தாரு
சாந்தனு தினம் துதி செய்தால் ஐயன்
சாயுஜ்ஜிய பதங்களை தடையின்றியடைய
சேர்ந்தோம் சேர்ந்தோம் என்று வெற்றி
சங்கு சின்னங்களூதிடு தெளிவாக தாரு

உலகில் வந்தானென்றும் ஊது இந்த
உலகத்தை ஆள வந்தானென்றும் ஊது
பலதும் அவனென்று ஊது
பலவிளையாடல் செய்யவந்தானென்று ஊது தாரு

வந்தான் கணேசனென்றாது
அம்மை மாது உமையவள் பாகனென்றாது
கந்தகடம்ப னென்றாது லக்ஷிமி
கார்வண்ணமேனியன் பிர்மா வென்றாது தாரு

என்றுமிவனென்றாது இவன்
யெல்லாதேவர்க்கும் இறைவனென்றாது
அன்று இவனென்றும் ஊது
அருளரசாக்ஷி செய்ய வந்தாரென்றும் ஊது. தாரு

கலிகால நிகழ்ச்சி. ஆண்டவர் முன்பே தெரிவித்தது

(1) ஈசனே கண்பாராய்
ஈசனே கண்பாராய்
இருப்பிடத்திலே கனங் குறைவது
மனப்பயத்திலே பெலங்குறைவதும் {ஈசனே

(2) கொடிய கலியிளைய் யாயிரத்துக்
கொலைவிழுது பாராய்
கொஞ்சங் கொஞ்சமாய் சஞ்சலங்களை
கூறுகிறேன் கேளாய்

மடிய மடிய புரள புரள
சொல்லுகிறேன் பாராய்
மாய்கையான பிரபஞ்சத்தை
மறந்து விடுங்கண்டாய் [ஈசனே

(3) கலியுகத்திலே வரதரென்றும்
வந்துதித்தது மிங்கே
கடம்பவன நாதரென்று
பேரெடுத்தது மிங்கே

பலிதமில்லை என்றுரைக்கும்
பாவிகளையிப்போ
பார்த்திருக்க பதை பதைக்கச்
சொல்கிறேன் பாராய் [ஈசனே

(4) அட்டகுழி அரணைகுழி
நரகமது இங்கே
ஆண்டவனது ஆஞ்ஞா சக்கர
கொடியதுவு மிங்கே

துஷ்டர்களை யொடுக்கவந்த
படைகளுமோ இங்கே
சூட்சமதாய் எடுத்துரைப்பேன்
பார்த்துக்கொள்வாய் இனிமேல். [ஈசனே

(5) கடைபொலிதான் கொடுத்திடுவேன்
முதல் கிழமை தன்னில்
காலனருவான்கள் சொன்ன
வாயதுவுமெங்கே
கிழக்கிருந்து உதித்து வரும்
சூரியனே பாராய்
கிரகமது எங்கிருக்கு
பார்த்துக்கொள்வாய் இனிமேல் [ஈசனே

(6) எதிர்த்து வரும் பேரையெல்லாம்
சங்கரிப்பேன் பாராய்
ஏழை பணக்காரரெல்லாம்
எதிர்த்து வரவேண்டாம்
கொதிக்கக் கொதிக்க சொல்லுவதை
பார்த்திருந்து மிப்போ
கொலை களவு செய்வாயானல்
கொக்கரித்துக்கொல்வேன் [ஈசனே

(7) அஷ்டகாளி குலவைபோட
எட்டுதிசையில் நின்று
அமரர் முனவர் சத்தம்போட
அஷ்டதிசையில் நின்று
பட்டபகல் போலிருக்கும்
பலிகள் வாங்கும் சமயம்
பதினறு கோணமெங்கும்
கடுகடுங்கும் கண்டாய்
ஈசனே கண்பாராய் இனி
ஈசனே கண்பாராய்.

சற்குரு மாலை

அக்கமணிபூதியணி எங்கள் குருநாதன்
மூக்கணுரு முதல்வனவன் எங்கள் குருநாதன் 1
ஆனந்த ரூபனடி எங்கள் குருநாதன்
தானந்தமில்லானே எங்கள் குருநாதன் 2
இந்தவினை சடையிலணி எங்கள் குருநாதன்
என்மனதிலிடையிருப்பான் எங்கள் குருநாதன் 3
ஈரேழு புவிகள்பணி எங்கள் குருருநாதன்
ஈசனைகள் போக்கடிப்பான் எங்கள் குருநாதன் 4
உண்மையுடனிருப்பவர்க்கு எங்கள் குருநாதன்
உள்ளமதிலுறைத்திடுவான் எங்கள் குருநாதன் 5
ஊசலுறுமணமாலை எங்கள் குருநாதன்
ஒரு வழியில் வைத்திடுவான் எங்கள் குருநாதன் 6
எண்ணுவா ரெண்ணமெல்லாம் எங்கள் குருநாதன்
ஈடேர செய்திடுவான் எங்கள் குருநாதன் 7
ஏவல்கொள்ளும் பொறிபுலனை எங்கள் குருநாதன்
எனக்கடிமையாக்கி வைப்பான் எங்கள் குருநாதன் 8
ஐமதம் தவிர்த்திடுவான் எங்கள் குருநாதன்
ஆதிநடு அந்தமில்லான் எங்கள் குருநாதன் 9
ஒப்பற்று நிற்பவண்டி எங்கள் குருநாதன்
உலகு தொழ வந்தவனே எங்கள் குருநாதன் 10
ஓமென்ற ஓரெழுத்தான் எங்கள் குருநாதன்
ஓங்காரத்துட் பொருளானவன் எங்கள் குருநாதன் 11
அவதார வள்ளலடி எங்கள் குருநாதன்
அன்பர்களுக் கன்பனடி எங்கள் குருநாதன் 12
கருணைமிக உள்ளவனும் எங்கள் குருநாதன்
கதியுதவகள்ள மில்லான் எங்கள் குருநாதன் 13

நப் போலும் மெய்யுறவான் எங்கள் குருநாதன்
மெய்யாரை வைப்பாளன் எங்கள் குருநாதன் 14
சங்கரனே இங்கடைந்தான் எங்கள் குருநாதன்
ஷண்மதங்கள் உண்மை தங்க எங்கள் குருநாதன் 15
ஓமலியனே பார்த்தருள்வான் எங்கள் குருநாதன்
ஞான மனதார்க் கருள்வான் எங்கள் குருநாதன் 16
இடம் பாதி சனமில்லான் எங்கள் குருநாதன்
ஆடும் பேயை அகற்றிடுவான் எங்கள் குருநாதன் 17
இணையற்ற மகிமை யுள்ளான் எங்கள் குருநாதன்
துணையற்று தோன்றிடுவான் எங்கள் குருநாதன் 18
தரையிலுள்ளார் செய்தவத்தான் எங்கள் குருநாதன்
தான்காண அவதரித்தான் எங்கள் குருநாதன் 19
நல் வழியை சோதிப்பான் எங்கள் குருநாதன்
அவ்வழியை சோதிப் பான் எங்கள் குருநாதன் 20
பரமுக்தி தருவாண்டி எங்கள் குருநாதன்
தீர முற்று வருவாண்டி எங்கள் குருநாதன் 21
மறை நான்கும் புகழ்ந்திடுவான் எங்கள் குருநாதன்
மறவாமல் எனக்கருள் வான் எங்கள் குருநாதன் 22
வியப் பறிந்து கார்ப் பாண்டி எங்கள் குருநாதன்
எதிர்த்தவரை ஏற்பாண்டி எங்கள் குருநாதன் 23
அரவணியும் பரமனடி எங்கள் குருநாதன்
தீரமுள்ள குமரனடி எங்கள் குருநாதன் 24
அலகு மெழில் ஞானியடி எங்கள் குருநாதன்
கலக்க மறு வள்ளலடி எங்கள் குருநாதன் 25
வளர் பாசக் கட்டறுப்பான் எங்கள் குருநாதன்
உளநோயை சுட்டெரிப்பான் எங்கள் குருநாதன் 26
அழக மெனு மணிமுக்தன் எங்கள் குருநாதன்
பலவினைகள் பறித்தொடுப்பான் எங்கள் குருநாதன் 27

உருமாலை போட்டிடுவான் எங்கள் குருநாதன்
உண்மை நெறி கூட்டிடுவான் எங்கள் குருநாதன் 28
அறமழியார்க் கன்பனடி எங்கள் குருநாதன்
மறந்திடுவார்க் கிடையனடி எங்கள் குருநாதன் 29
அனவரதம் பணிவமடி எங்கள் குருநாதன்
இனங் கூடத்துணிவமடி எங்கள் குருநாதன் 30

இரெட்டியபட்டி சுவாமிகள் அருளிச்செய்தது

எண்சீராசிரிய விருத்தம்

சிலமிகு செகதீசன் பெற்றகண்ணே
தெவிட்டாத தெள்ளமுதே தேனேசெந்தில்
வேலவர்க்கு முன்பிறந்த சுமுகாஞான
வித்தகனே விண்ணோர்க்கு மேலாயுன்னை
ஞாலமுளோர் புகழ்ந்தேத்தும் விதங்கள்யாவும்
நாவினாற் சொல்லொண்ணு தருமையென்னே
கோலமதகுஞ் சரமே சதங்கை கொஞ்சக்
கூத்தாடி எனையாள வருகுவாயே. (1)

அன்னையுமை மனமகிழ்ந்து பயின்றபாலா
அனைவோர்க்கு முதற்பொருளே அன்பர்சிலா
நன்னயமாய் நின்பால் வந்தடுத்தே னென்றன்
நாவினு லுனைப்பாட அருளிச்செய்தாய்
பன்னுதமிழ்க்கரசே மெஞ்ஞான மூர்த்தி
பலகலைக ளாராயும் பலன்கள்நல்கி
இன்னிலத்தி லுன்மகிமை யறியச்செய்த
இங்கிதத்தை யென்சொல்வேன் எம்பிரானே. (2)

இன்னிசை வெண்பா

மதுராபுரி வடக்காய் வைகைநதி தென்பாற்
சதுராரயில் யிலந்தன் மேற்காய் எங்குங்
கதித்தோங்கும் செந்நெல் சூழ்கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தா யென்னுள்ளத் துறை. (3)

நேரிசை வெண்பா

ஐந்துகரத்தாய் அறுமுகற்கு நேர்மூத்தாய்
முந்த வுதித்த முதல்வா வென் — சிந்தை
குடியிருந்தே காக்குங் கோமா னுனையான்
அடிதொழுதேன் வந்தென்னை யாள். (4)
சென்ம மெடுத்ததோர் தீவினையோ யானறியேன்
கன்மமோ யாதோ கலங்கிடுவேன்—நன்மைபெற
ஆர்சொல்வார் நன்னெறி களப்பனே நின்னடியார்
சார்வை தெரிந்திடவே சாற்று. (5)
நீயே துணையாகி நின்மலமாய் நிற்குணனாய்த்
தாயாகி தந்தையாய் சற்குருவாய்—சேய்போற்
கருதி எனையாண்ட கணபதியேயல்லால்
வருவதியார் சொல்லாய் வழி. (6)
உலகிற் பெரியோரா ரூத்தமரைக்காண
கலமுன் தெரியாத நாயேன்—கலைபலவும்
உற்றுணர்ந்தார் வாசல் வழி வொருக்காலுஞ் சென்றறியாச்
சிற்றறி வேனன்மை பெறச்சேர். (7)
இராச விருட்சஞ் சிவமாயின் வேம்பு சத்தியதாய்
ஆசையுடன் வந்தேயமைந்து வெகு—நேசமுடன்
புத்திரனை பெற்றுரிப் பூதலத்தி லெல்லோரும்
மூத்திபெற வென்றே முதல். (8)

நெஞ்சினுக்குபதேசம்

விருத்தம்

அன்பினை பெறுவாயாகில்
அதர் மங்களனைத்தும் நீங்கித்
துன்பமுந் தவிர்ந்துபோகும்
துயர மிங்குண்டோ சொல்வாய்
வன்பனாய் உலகில் தோன்றி
வாழ்வுநாள் முழுதும் செய்த
கன்மங்கள் வந்து சூழ்ந்த
காரணமறிவாய் நெஞ்சே. (9)

அறுசீராசிரிய விருத்தம்

வினையகற்றும் பெருமானிவ் வேளைவந்து
காத்தருள்வாய் விமல மூர்த்தி
உனையல்லால் வேறு துணையுண்டோவிவ்
வுலகத்தி லொருவரில்லை
மனமுழன்று சுழல்கின்றேன் மாயவலைச்
குட்சிக்கி மதிமயங்கித்
தினமுழி யானலைவேனே சகிக்கவொண்ணா
துனக்கபயஞ் செப்புவாயே. (10)

எழுசீராசிரிய விருத்தம்

நாடுவோர்க் கெல்லாம் நாடியபடியே
நல்வரங் கொடுக்கு நல்லீசன்
பாடுவோர் தமக்கு பாடுதற் கிசைந்து
பயன்களை யளிக்கு நல்பதத்தோன்

NADU ... MADRAS
112907

ஆடுவோர் கூத்தை அறிகின் றசிலன்
அன்பர்தஞ் சிந்தையிற் புகுந்து
கூடியே யுறவாய் வழியது காட்டிக்
குணங்களை யுறைக்கு மெய்க்குருவே. (11)

சுவாமிகள் பெங்களூர் ரயில்வே ஜங்ஷனில் அருளிச்செய்தது

விருத்தம்

பூரணத்திற் பூரணமாய் எங்கும் நிறைந்து
ஆனந்தம் பொங்கியூறும்
காரணனே எனையிங்கே யழைத்தவகை
இன்னதென கருத்திற் கொள்ளேன்
தாரணியோர் செயலதனை நீயறிவாய்
யானறிய சத்தி யுண்டோ
வாரணமா முகத்தானே வந்துநீ
யாட்கொள்வாய் மறந்திடாதே. (12)

மறந்து விட்டா லின்றுவரை
அனுதினமும் பாலூட்டி வளர்த்ததாரு
கறந்து கறந்தாவின் கன்றுக்குப்
பாலூட்டுங் கதையைப்போல
சிறந்தெனை நீவளர்த்து விட்டாய்
செல்வனே இனிவேறு சிந்தையுண்டோ
பிறந்து பிறந்துழல்கின்றேன் பிறப்பறுக்க
அருள் செய்யும் பேரரானே. (13)

பலவழியாய் நின்றுகொண்டு
பலவழியாய் காட்டுகின்ற பரமநாதா
கலைபலது மாராய்ந்து உனதடிமை
உறுதிகொண்ட கருத்தின் வண்ணம்
நிலை பலதும் தெரிவித்தாய் ஒன்றெனவும்
வழிகாட்டி நீநானென்று
அலைவிலாமனதாக்கி யுலகமெச்சும்
அரசுசெய்ய அடிமைகொண்டாய். (14)

உபதேசம்

ஒப்பற்ற செய்கைகள் எவையானாலும்
உலகத்திற் செய்யாதே உண்மைசொன்னேன்
தப்பிதங்கள் வந்துவிடும் நமனுக்காளாய்த்
தாங்காத வறுமை வந்து தவிப்பாயப்பா
முற்பிறப்பில் செய்தவினைப் பாக்கிக்காக
மூட்டிவிட்டானீ சனவன்புவியின் கண்ணே
இப்பிறப்பில தையறிந்து நடவாவிட்டா
லெமன்கையிற் சிக்குவது திண்ணந்தானே. (15)

கங்கைதனில் நீராடிக் காயாசங்கள்
தரித்தவர்போல்
அங்கமுழுதும் நீறணிந்தே
அரனைத்தொழுதுங் கடிபணிந்தே
எங்குந்தொழுவர் கண் மூடியிருப்பர்
மௌனஞ் சாதிப்பர்
மங்கைதிருடும் கள்ளரப்பா
மாயவலைக்குள் சிக்காதே. (16)

அங்கவன் செய்த நன்றி யறிந்து
நீ நடந்தாயாகில்
இங்கு முன்செய்த பாவம்
யினித்தொடராது கண்டாய்
பொங்கமா இச்சென்மத்தே
புரிந்திடுந் தபசினாலே
சங்கரன் பாதஞ் சேரத்தாமத
முண்டோ நெஞ்சே. (17)

ஆடுகின்ற கூத்தெல்லா மரன்கூத்தே
யல்லாது யவனிமீதில்
தேடுகின்றபொரு ளெல்லா முன்னதென
மதிக்கின்ருேம் தேகம் பொய்யே
நாடு நகர் பொருளெல்லாம் நம்மைவிட்டு
மகலாதோ நமன் வந்துற்ருல்
ஓடுகின்ற ஓட்டமல்லால் பாழ்மனமே
எனக்கிங்கேஒருக்காலுண்டோ. (18)

ஆசைகொண்ட பாழ்மனமே அகிலமதிலேன்
பிறந்தோமய்யன்பாதம்
நேசமுடன் விரும்பிமுன்னுள் செய்வினையை
யகற்றுங்கால் நித்தநித்தம்
பூசனை செய்வது மன்றிப் பேதாபேதம்
நீக்கிப்புலங்கள்யாவும்
பாசமறநீக்கிப் பேரின்பானு
சுகமடையப்பகுத்தவாறே (19)

வண்ண விருத்தங்கள்

தானதன தனதனன தானதன தனதனன
தானதன தனதனன—தனதான
சிவனெனவெதன மனம் விடாமலது தொடரவினை
சேருவகையாவதென—வறியேனான்
சிறுமலமாயையொடு கூடிவிளையாடுமெனைத்
தேடிமதியாவர் சொல—வருவார்கள்
பாவியெனுமோர் குறைகணீதிகெடயார் செய்தது
பாவனெனையேதொடர—வழியேது
பாவமிதுவோ முன்செய்த பாவமெனயாரறிவர்.
பாரிலுளோரேகுவது—முறையோசொல்
காவுங்காடுவோர் கன்வினை காலனணுகாதபடி
காலனைக் காலாலுதைத்த—கருணேசா
காமன்கணையாலுருகி நாவுதடுமாறியிது
காலவரையானுழல்வ—தறியாயோ
யாவுமறியாதவுனை யாவரறிவர்களிது
யானுமறியேனெனது—குறைதீராய்
யாதுமறியேனுனது பாதமதை நாடும் வகை
நாதனே எனக் கருள்செய்—குருநாதா. (20)

தனனத் தனனதத்த தனனத்தனனதத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த—தனதான

வயிரத்தினடுபச்சை பவழத்தி னடுமுத்து
மருவிக் கோமேதகத்தி னிடைபுஷ்பராகமிட்டு
மகிழப் பெருமாணிக்க வளைவிட்ட நீலமொய்த்த
— வைடூரியமோடு

ம்குடத்தில் நவரெத்தின மிலகச் சிரசிலிட்டு
மகிழூற்ற பிரசன்னத்து வதனத்தி னழகிற்கொள்
வடிவைக் கண்டிட பற்றியடிமைப் படுவாதப்போ
— கணநாதா

உயிர்பற்றி நிலைநிற்கக் கடமெத் தகைவிளக்கும்
உடல்பற்றி உயிர்நிற்கும் விதமெப்படி நடக்கும்
உணவற்ற மனதிற்கு செவதுசத்திய மெதுநித்ய
— மறியேனே

உலகத்தி னெறிபற்று மலசத்திகள் மறைத்து
உருவத்தி லளவற்ற சனனத்தி லீடுபட்டு
உருகிக் கண்ணீர் வடித்து சிறுமைபடவும் விட்ட
— குறையாதோ

தயிருக்குளெழு வெண்ணை உரியிற்றிருடியுண்ட
சகல கோபாலகிருஷ்ணவரி பக்தரெனுநித்ய
தருமக் கொடி பறக்க அடிமைகருள் செய்வித்த
—குருநாதா

சகுணகிரியை பற்றி மனதை ஆணிவுறுத்தித்
தனிமை படவிரக்தி யடைய கிருபைசித்தி
சகசப்பட நிறுத்தி யருணிற்குணமே முத்தி
—யெனும் வீடே

கெய்சர் ஜெர்மனிபட்ட மெய்யாய்ப் பனிரெண்டாண்டு
கெடிவைத்துறுதிபற்றும் நிருபமெத் தெணைகோடி
கீழ் நாமக்காரர்கள் தெள்ளியவரகா சாட்சி
—யருளோடும்

கெர்வித்தசுராயுத்தம் படவெட்டிக் கொடிகட்டிக்
கிளைசெய்யுமமரர்க்கு முனிசித்தரிஷிகட்குங்
கிருபை கண்ணொளிபற்றி யமரர்க்கு சிறைமீட்கும்
—பெருமானே

(21)

பல்லவி

கூவுதையா சேவல் கூவுதையா
கொக்கரித்து கூத்தாடி கூவுதையா

அநுபல்லவி

கூவுகின்ற சத்தமதின் குறிப்பறி யாதவர்க்குக்
கொடிய நரகமென்றுங் கூவுதையா

சரணம்

கணபதி வந்தாரென்றுங் கூவுதையா அவர்
கலியுக வரதரென்றுங் கூவுதையா
தேவர்கள் வந்தாரென்றுங் கூவுதையா யிந்தச்
செகமெல்லாம் ஓர் குடைக்குள் கூவுதையா
அரசாள வந்தாரென்று கூவுதையா ஈச
வைதாரம் செய்தாரென்றுங் கூவுதையா
மும் மூர்த்தி வந்தாரென்றுங் கூவுதையா யிந்த
மூவுலகும் கொக்கரித்து கூவுதையா
ஏகபராபர வஸ்துவாகி யிங்கே
யேசுவும் வந்தாரென்றுங் கூவுதையா
ஈசா அலைகிஸ் சல்லாம் வந்தாரென்றே
இங்கிதமாய்க் கொக்கரித்து கூவுதையா
மகதி அலைகிஸ்சல்லாம் வருவாரென்றும்
வகை வகையாய் கொக்கரித்து கூவுதையா
திசாலும் வந்தாரென்றுங் கூவுதையா யிந்தச்
செகமெல்லாம் கொக்கரித்து கூவுதையா
வீரபோக வசந்தரென்று சொல்லி நித்தம்
விதவிதமாய்க் கொக்கரிக்துகூவுதையா

நீதிகொடி நாட்டவென்று தேவரெல்லாம்
    நீணிலத்தில் வந்தாரென்றுங் கூவுதையா
சாஸ்திரங்கள் சொன்னபடி தவருதிங்கு
    சகலரும் வந்தாரென்றுங் கூவுதையா
ஆகாயமாய்பறந்துங் கூவுதையா வெண்ணி
    லண்டமெல்லா சுற்றிவந்துங் கூவுதையா
இரவும் பகலுமாய் கூவுதையா வதே
    ஏகாந்தமாயிருந்துங் கூவுதையா
அற்புதங்கள் காட்டியுமே கூவுதையா நித்தம்
    அந்தரமாய் நின்றுகொண்டுங் கூவுதையா
வேதங்கள் சொல்லியுமே கூவுதையா நல்ல
    வேதாந்தங் காட்டியுமே கூவுதையா
சாத்திரங்கள் சொல்லியுமே கூவுதையா வுலகிற்
    சகலருக்குந் தோணும்படி கூவுதையா
மானிடரூபங்கொண்டு தேவரெல்லாம்
    வையகத்தில் வந்தாரென்றுங் கூவுதையா
பொய் கொலை களவுகள் கூடாதென்றும்
    பொருந்தவே கொக்கரித்து கூவுதையா
துஷ்டர் மடிவாரென்றுங் கூவுதையோ யின்னம்
    சொற்ப நாளிருக்குதென்றுங் கூவுதையோ
உலகமழியுமென்றுங் கூவுதையோ நிலையாய்
    உத்தமரிருப்பாரென்றுங் கூவுதையா
வேதந் தவறுகின்ற மானிடர்க்கு நல்ல
    வீரவாழ்வு வந்ததென்றுங் கூவுதையா. (கூவு)

ஸ்ரீ ஓம் இரெட்டியபட்டி சுவாமிகள்

குருநாதர்

(இரெட்டியப்பட்டி சுவாமிகள் சரித்திரம்)

எம் குருநாதராகிய இரெட்டியபட்டி சுவாமிகள் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் பாண்டி நாட்டில் அவதரித்தார்கள். ஆண்டவனால் படைப்பு காலந்தொட்டு ஏற்பட்ட ஜீவன்களில் மக்கள் பிறவி இன்றியமையாதது. மக்களாய்ப் பிறந்த ஜீவன் தத்தம் வினைகளுக்கு ஏற்றவாறு பிறவி எடுத்து மறிப்பதும் பிறப்பதுமாயிருந்து வருகிறது. இவ்விதமாக மக்கள் பிறந்து இறந்து உழலாமல் பேரின்பவீட்டை யடையும் படி செய்ய அவ்வப்போது பெரியார்கள் பலர் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தி பிறவா பேரின்பமுத்தி யடைய அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறு நல்வழி காட்டி வந்தனர். அப்பெரியார் வழி நின்று மக்கள் பலர் ஆண்டவன் ஆணை அறிந்து உலக வாழ்க்கை நடத்தி ஆண்டவன் திருவடி நிழலில் எய்தினர். இந்த விதமாக ஆண்டவன் நல்லருள் பரப்பி மக்களை உயர்ந்த நிலையில் இருக்கச் செய்த பெரியார்கள் பற்பலராவார்கள்.

சுவாமிகள் பிறப்பிடம்

சுவாமிகள் அவதரித்த நாடு பைந்தமிழ்ப் பாண்டிநாடு. தற்காலம் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த திருநெல்வேலி

ஜில்லா கோயில்பட்டி தாலூகா நாகலாபுரத்தைச் சார்ந்த இரெட்டியபட்டி என்னும் சிற்றூர் ஆகும். கோயில் பட்டி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இரெட்டியபட்டி சுமார் 28 மைல்கள் தூரம் உள்ளது. கோயில்பட்டியி லிருந்து எட்டியாபுரம், விளாத்தி குளம், நாகலாபுரம் வழியாக இரெட்டியபட்டிக்குச் செல்லவேண்டும்.

இந்தப் பாதையில் மோட்டார் வண்டிகள் செல்லு கின்றன. இரண்டு மணி நேரத்தில் செல்லலாம். ஊர் மிக்க வளப்பம் பொருந்திய ஊர் என்று சொல்வதற் கில்லை. ஏழை மக்கள் வசித்துவரும் நம் இந்திய கிராமங் களில் இதுவும் ஓர் ஊராகும். சுவாமிகள் தென்னாட்டுச் சைவ வேளாள குடும்பத்தில் தோன்றியவர்கள். இக் குடும்பத்தார் ஆலய வழிபாடு பூசனை நடத்தி வந்தவர்கள். ஊராராலும் உற்றார், உறவினர்களாலும் நன்கு மதிக்கப் பெற்றுவந்த ஒரு சிறந்த குடும்பமாகும். சுவாமிகள் பரம்பரை சுவாமிகள் தோன்றுவதற்கு என்று வெகு காலம் தவங்கிடந்தே இருக்கவேண்டும். சுவாமிகளது பெற்றோர் மாதவமுடையோர்கள். இல்லற வாழ்க்கை இனிது நடத்தி வந்தவர்கள். தந்தையார் பெயர் வீர பத்திர பிள்ளை. தாயார் பெயர் ஆவுடையம்மையார். ஆண்டவன் ஆணைப்படி ஏழாவது கர்ப்பத்தில் நமது சுவாமிகள் அவதாரம் செய்யவிருந்தார்கள். கலியுகம் 4957, கொல்லம் 1932, நள ஹு புரட்டாசி ௴ 2௳ செவ்வாய்க்கிழமை ரேவதி நக்ஷத்திரம் மகரலெக்கினத்தில்

உதயாதி 25-நாழி 47-விநாடியளவில் திரு அவதாரம் செய்தருளினார்கள். (1856-ம் ஸ்ரீ செப்டம்பர்மீ 16உ) மகவு மண்மீது காக்ஷியளித்ததும் அதன் தெய்வ வழகினைக் கண்டு யாவரும் உவகை பூக்கலாயினர். இம் மகவின் வெளித்தோற்றம் பார்ப்பவர்களுக்கு மிக்க கவற்சி தருவதாயிற்று. கோள்நிலை அறிந்து சொல்லு வோர்கள் "இது மனிதப்பிறப்பு அல்ல; தெய்வப் பிறப்பு. யாவரையும் உய்விக்க வந்தது; அடிமை செய்யாது. ஆட்கொள்ளும் அரசு என்றெல்லாம் எடுத்து சொல்லுவாராயினர்.

பிள்ளைப் பருவம்

சுவாமிகளது திரு அவதாரம் பெற்ற அன்னைக்கு அள வில்லாத மகிழ்ச்சியும் தந்தைக்குப் பூரிப்பும் ஊராருக்கு உவகையும். ஏற்பட்டது. மூன்று வயது கடந்தது. சுவாமிக்குச் சுப்பிரமணியம் என்ற அழகான பெயர் இடப் பெற்றிருந்தது. சுப்பிரமணியம் மற்ற பிள்ளைகளைப் போல் இல்லை. அவர்களோடு கலந்து விளையாடுவதில்லை. தனியிடத்தில் இருந்துகொள்ளும். ஆகாயத்தைப் பார்த்து கைகூப்பித் தொழும். இருந்ததுபோல் இருந்து தேம்பி அழும். சுவாமி அறைக்குள் புகுந்து கொள்ளும் புஷ்பம் எடுத்துப் பிள்ளையார்மேல் போடும்; சிரிக்கும், அழும், குதிக்கும் கூத்தாடும்.

சுப்பிரமணியத்தின் செயற்கரிய செயல்களைக் கண்டு, வீட்டாரும் ஊராரும் ஒருபுரம் களித்தனர். ஒருபுரம்

ஏங்கினர். இது என்ன குணங்கெட்ட பிள்ளையாய் இருக்கிறதே என்று வருந்தினர். மற்றொரு சமயம் இது அதிசயமான குழந்தைபோலும்; கடவுளே உருவுமாக வந்தது போலும் என்றெல்லாம் சொல்லி மகிழ்ந்தனர்.

பள்ளிக்குச் செல்லும் வயது வந்தது. அவ்வூர் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சுப்பிரமணியத்தை அனுப்பினார்கள். நம் இளஞ் சுப்பிரமணியம் குருவுக்கு மிஞ்சிய சீடராகப் படித்துச் செல்வதை வாத்தியார் கண்டு வியப்பது உண்டு. இப்படி சில ஆண்டுகள் தமிழ் மொழியைப் படிக்கவும் எழுதவும் பழக்கப் பெற்றார்.

இந்த அளவே இவர் பள்ளிக்கூடத்தில் படித்த படிப்பு மற்றவையெல்லாம் ஆண்டவன் அருளால் ஓதாது உணர்ந்த ஞானங்களாகும். குருநாதர் பிற்காலத்தில் எந்த நூல் பார்த்தபோதிலும் அதன் பொருள்களை அடியவர்களுக்கு எடுத்துச் சொல்லும் தன்மை சுவாமிகள் ஓதாது உயர் ஞானம் அடைந்திருந்ததை விளக்குவதாயிற்று. புத்தகங் கொண்டு படித்த படிப்பு கொஞ்சமானாலும் எண்ணங்கள் எல்லையில்லாது போய்க்கொண்டு இருக்கும். அப்படி சிந்தனை செய்து பல உயர்ந்த முடிவுக்கு வந்தார். நமக்கு உள்ள அறியாமையை நாம் பெற்றிருக்கும் உடலைக்கொண்டு போக்கிக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தார். இந்தத் தேகம் திடமானதாக, தூய்மையாயிருப்பதற் கேற்ற வழிகளை

நாடலானார். உடற்கு உறுதி பயப்பனவாக உள்ள உடற் பயிற்சியினால் உடல் உரம்பெற்று திகழ்ந்தார்கள்.

குமாரப் பருவம்

குருநாதருக்கு வயது பதினாறு நடந்தது. குலத்திற்கேற்ற வேளாண்மைத் தொழிலைத் திறம்பட செய்து வந்தார்கள். ஒரு கலம் விளையும் நிலம் இரண்டு கலநெல் விளைவதாயிற்று. நல்ல கைராசியுடையவர் என்று உற்றாரும் பெற்றாரும் வியந்து கொண்டாடினார்கள். நமது குருநாதர் ஏழை மக்கள் மனம் நைந்து வாடுவதைக் கண்டார்கள். அவர்களுக்குத் தேவையுள்ள உண் பொருள் கிடைப்பதில்லை. அவர்களுக்குத்தேவையான உணவுப்பொருள்களை வியாபாரம் செய்து வரலானார்கள். பண்டங்களைக் கொள் முதலுக்கே ஏழை ஜனங்களுக்குக் கொடுத்துஉதவினார்கள்.

பயிரிடுந் தொழில் குன்றியும் வியாபாரத் துறையில் லாப மின்னியில் நஷ்டமும் ஏற்பட்டதனால் வீட்டில் உள்ளவர்களுக்குக் குருநாதரிடத்தில் வெறுப்பும் சினமும் ஏற்பட்டது. சுவாமிகள் வீட்டாரிடத்தில் எதிர்பார்த்தபடி கிடைத்து விட்டபடியால், தாம் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளுக்குத் தாம் போட்டு வைத்திருந்த திட்டப்படி நடத்த வீட்டைவிட்டு வெளியாகி மறைந்து விட்டார்கள்.

மதுரை வாழ்க்கை

குரு நாதர் வீட்டிலிருந்து புறப்படுங் காலத்தில் 23 வயது ஆகியிருந்தது. ஆண்டவன் திருவிளையாடல்

புரிந்த இடமாகிய மதுரையை அடைந்தார்கள். வைகை நதியும், மீனாட்சியம்மை ஆலயமும் சுவாமிகள் மனதை விட்டு அகலவில்லை. இவைகளே தாம் கோரிவந்த காரியங்களுக்குத் தகுந்த நிலையங்களாகக் காணப்பட்டன. தாம் யார் என்பதை உலகிற்குக்காட்ட உள்ளம் இல்லை. சிறிது காலம் மறை முகமாயிருக்க எண்ணங்கொண்டார்கள். மீனாட்சியம்மன் சன்னதியிலுள்ள கடை ஒன்றில் கணக்கு வேலை பார்ப்பதாய் ஒப்புக் கொண்டார்கள். தனக்கு கொடுத்த கணக்கு வேலையைத் திறம்பட நடத்தி வந்தார்கள். தொழில் அதிக லாபம் கட்டி வந்தது. அதிக மகிழ்ச்சிகொண்ட முதலாளி கடையின் வரவு செலவு பூராவையும் சுவாமிகள் வசத்தில் விட்டு விட்டார்கள். தொழில் உன்னத நிலையில் நடந்து வந்தது.

குருநாதரின் தினசரி ஒழுக்கங்கள் பார்ப்பவர்களுக்குக் கடையில் கணக்கு வேலைசெய்வதா யிருந்து வந்தது. பலருங் காணாத நேரங்களில் சுவாமிகள் தாம் பிற்காலத்தில் நடத்த வேண்டிய பெரிய காரியங்களுக்கு ஏற்றதாக இடைவிடாது ஆயத்தம்செய்து வந்தார்கள். விடியல் 3 மணிக்கு விழித்தெழுவார்கள். விரைந்து சென்று வைகை நதியில் நீராட்டம் நடக்கும். நீராட்டம் முடிந்தவுடன். ஆற்றங்கரையிலுள்ள விநாயகர் ஆலயத்தை அடைந்து, வந்தனை வழிபாடுகள் நேர்மையுடன் நடத்தி வருவார்கள். இவ்வாறு சுவாமிகள் நடந்து வருவதை அதிகாலையில் ஆற்றுக்கு வரும்

கண்பர்கள் பலர் கண்ணுற்று அதன்படி தாங்களும் சுவாமிகளிடத்தில் அன்புடன் நடந்து பழகி வந்தார்கள். குருநாதருடைய பெற்றோர் மற்றோர்கள் சுவாமிகள் காணமல் சென்றுவிட்டதற்கு வருந்தினார்கள். பல விடங்களில் தேடியலேந்து மதுரை வந்து சுவாமிகளைக் கண்டார்கள். ஊருக்கு வந்து விடும்படி அழைத்தார்கள். குருநாதர் ஊர்க்குச் செல்ல மறுத்துவிட்டார்கள். அதனால் பெற்றோர்கள் சுவாமிகளுடன் தங்கள் மனிதர்களை உடன் வைத்துப்போக எண்ணினார்கள். சுவாமிகள் அண்ணார் மகன் பிச்சாண்டியா பிள்ளையைச் சுவாமிகளுடன் இருந்து வரும்படி திட்டம் செய்துவிட்டு ஊருக்குச் சென்றார்கள். பெற்றோர் தமது குமாரர் சுப்பிரமணியத்திற்குக் கலியாணம் செய்ய முயற்சித்தனர். ஆண்டவன் ஆணையும் அவித மிருந்தது.

எட்டையபுரம் ஜமீனைச்சேர்ந்த நடுவிற்பட்டி வீரதீர கம்பீர முருகப்பிள்ளையின் அருந்தவப் புதல்வியார் மாரியம்மையாருக்கும் நமது குருநாதருக்கும் மதுரையில் தாரண ஆனிமீ-த்தில் திருமணம் நடந்தேறியது. சுவாமிகள் உள்ளத் துறவுகொண்டிருந்தாலும் முன் வினையின் முனைப்பினால் இல்லறத்தரானார்கள். இரெட்டியபட்டியில் சுவாமிகளது தந்தையார், மகன் சுப்பிரமணிய பிள்ளைக்குத் திருமணம் நடந்துவிட்ட உவப்பினோடு தைமீ த்தில் ஆண்டவன் திருவடி நிழலெய்தினார்கள். இதைக் கேள்வியுற்ற நம் சுவாமிகள் மதுரையி

விருந்து விரைந்துசென்று, தந்தைக்குரிய ஈமக் கடன்களைத் தமையன்மார்களோடு முறை வழுவாது நடத்தினார்கள். முன்பு தாம் குறிப்பிட்டபடி திரும்ப மதுரையடைந்து முன்னிலும் தீவிர பக்தியுடன் தினசரி ஒழுக்கத்தில் திகழ்ந்து உயர்ந்து வரலானார்கள்.

சுவாமிகள் தம்மை எவ்வளவு மறைத்து வைத்துக் கொள்ள முயன்றாலும், ஆண்டவன் திருவருள் பொலிவானது, அவரைக் கண்டுவந்த மக்கள் பாலும் அவர்கள் வழியாய் மற்றவர் பாலும் பரவுவதாயிற்று. சுப்பிரமணிய பிள்ளை என்றும் அதன் பின்னர் கணக்கப் பிள்ளை என்றும் பின்னர் சுவாமிகள் என்றும் யாவரும் அழைக்கலுற்றனர். சுவாமிகளின் சொந்த ஊரின் பெயராகிய இரெட்டிய பட்டியின் பெயரையும் சேர்த்து யாவரும் இரெட்டியபட்டி சுவாமிகள் என்று அழைத்தார்கள். குருநாதர் கடையில் கணக்கப்பிள்ளை வேலை பார்த்து வந்தாலும் பலதிறப்பட்ட மக்களும் சுவாமிகளை வந்து பார்த்தபடி இருப்பார்கள்.

மாணுமதுரை சுவாமிகள் என்று புகழ்பெற்ற மகான் ஒருவர் அவர் நம் குருநாதரிடத்தில் வரும்படி நேர்ந்தது. இல்லறத்திலிருக்கும் குருநாதர், மாணுமதுரை சுவாமிகளை வரவேற்று உபசரித்தார்கள். நம் சுவாமிகளின் உண்மையான உயர்ந்த நிலையை அறிந்த மாணுமதுரை சுவாமிகளும் மற்ற மக்களும் நம் குருநாதனைப் போற்றி

செய்து வந்தார்கள். குருநாதர் பெருமை முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்து வந்தது.

மதுரை பரிபூரண விநாயகர் திருக்காட்சி "மதுராபுரி வடக்காய் வைகைநதி தென்பால்" என்ற சுவாமிகள் பாடலில் குறிப்பிட்ட இடத்திலே சுவாமிகள் தினசரி ஒழுக்கத்தின்படி நீராடி தியானத்திற்குச் செல்லும் பொழுது தாம் குரு முகூர்த்தமாய்க் கொண்டாடும் விநாயகப் பெருமான் திருவுருத்தைக் கண்டு மிக்க பரவசத்துடன் அருகில் அணைந்து கொள்ள முயன்றபொழுது அவ்வழகிய திருத்தோற்றம் சிலா விக்கிரகமாக மாறிக் காட்சி யளித்தது. அப்பொழுதே தம்முடன்கூட விருந்த அன்பர்களுடன் அந்த விக்ரகத்தை அடுத்திருந்த அரசமரத்தடியில் அமைத்து நன்னீராட்டி, வந்தனை வழிபாடுகள் நடத்தி வந்தார்கள். தினசரி வழக்கத்திலும் கணேசப் பெருமானுக்குத் திருமஞ்சனம் தீபாராதனை முதலிய உபசாரங்கள் முறையுடன் நடந்தேறி வந்தன.

குருநாதருக்குக் குருவான ஆதி கணேச முகூர்த்தம் ஆற்றங்கரையில் தோற்றம் அளித்த விபரம் அடியார்கள் வாயிலாய் யாவரும் அறிந்து அடியார்கள் கூட்டம் மிகுந்து வந்தது. யாவரும் இரெட்டியபட்டி சுவாமிகள் என்று அதிகாலையில் கண் விழித்தெழுந்து, நீராடி விநாயக மூர்த்தியின் விடியல் வழிபாட்டிற்கு வர ஆரம்பித்தனர். மனநலம் குன்றிய மக்களும் உள்ளத்தூய்மை விழைந்தவர்களும் உடல் நலம் குன்றியவர்களும் மனநலம்

மங்கியவர்களும் பலர் கூடி ஊற்று நீராடி உளங் கசிந்து வணங்கி வந்தார்கள். வணக்கத்தின் பலன் யாவருக்கும் கைமேல் கிடைத்தது. நலத்தை நாடிவந்த மக்கள் பலரும் நாளுக்கு நாள் நலமோங்க மணங்களித்து ஆனந்த வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அன்புகனிந்த நமது குருநாதரும் ஆண்டவன் பூசனை அன்புடன் நடத்தி அனைவரையும் இன்புறச் செய்தார்கள்.

சுவாமிகளது பம்பாய் வாசம்

ஆண்டவன் அருளை உன்னதமாக அடியார் அனுபவித்து வந்ததுபோல கடை வியாபாரத்தின் உயர்ந்த நிலையை முதலாளி அடைந்தமையினால் சுவாமிகள் பேரில் அதிக அன்பு பாராட்டினர். இன்னும் வியாபாரத்தை விரிவாக நடத்த ஏற்பாடு செய்தனர். அயல் நாட்டினருடன் மொத்த வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். இந்த வியாபாரத்தை பம்பாயில் வைத்து நடத்த ஏற்பாடு செய்தார்கள்.

இந்த மொத்த வியாபாரத்தை பம்பாயில் சுவாமிகள் போயிருந்து நடத்தும்படி ஏற்பாடு செய்தார்கள். சுவாமிகளும் ஆண்டவன் திருவருளும் அவ்விதமிருக்க ஒத்துக் கொண்டனர். அவ்விதமே நம் குருநாதர் பம்பாய் சென்று வியாபாரத்தை மிக்க திறம்பட உன்னத நிலையில் நடத்தி வந்தார்கள். பம்பாயில் சுவாமிகள் கப்பல் வியாபாரம் நடத்திவர அதிக வியாபாரத்தின் பயனாக தலைமைக் காரியாலயமான மதுரையில் கணக்கு வேலை

மிகுத்து வந்தது. அந்தக் கணக்குகளைச் சரிபார்க்க சுவாமிகள் திரும்ப மதுரைக்கு வந்தார்கள். அடியார்களுக்குக் குருநாதர் இல்லாத காலத்தில் ஏற்பட்ட மனக் கவலைகள் போய் சுவாமிகளைக் கண்டவுடன் மிக்க ஆனந்த சாகரத்தில் திகழ்ந்தார்கள் முன்னிலும் விடியல் நீராட்டம் வந்தனை வழிபாடுகள் சிறந்து நடக்கலாயின. சுவாமிகள் வியாபாரத்துடன் உலக அரசியல் அறிவின் திட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்தார்கள். பல இடங்களையும் பல தேசங்களையும் கண்டு பழகி அரசியல் நுணுக்கங்களையும் தீவிரமாக பெற்றுக்கொண்டார்கள்.

விநாயகர் ஆலயம் கட்டுதல்

அடியார்கள் மிகுத்து வருவதினால் சுவாமிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. மேலும் மக்கள் தீவிர பக்தியுடன் நடக்கும்படி ஊக்குவார்கள். அடியார்கள் எண்ணியபடி சுவாமிகள் பரிபூரண விநாயகருக்கு ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகம் நடத்திவைத்தார்கள்.

சுவாமிகள் கடை வேலையில் இருந்து வந்தாலும் தமது தினசரி ஒழுக்கங்களில் தவறாமல் நீராட்டம், வந்தனை வழிபாடுகள் நடத்தி வந்தனர். ஆற்றங்கரையில் பிள்ளையார் கோவிலின்பக்கம் கிடந்த வெற்று நிலத்தில் கடம்பவன நாதர் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். குருநாதருக்கு முன்போல் வந்தனை வழிபாடுகளில் நோக்கங் கொள்ளாமல் மௌன மேற்று நடந்துவர ஆயத்தம் செய்தார்கள்.

பாடல் உதயம்

நம் குருநாதர் ஆண்டவன் வயப்பட்டு நிற்கும் காலத்தில் உள்ளத்தில் ஊற்றெழும் விபரங்களைப் பலரும் காணவேண்டுமாயின், அந்த அறிகுறிகள் சுவாமிகள் பாடிய பாட்டுகள் ஆகும். நம் சுவாமிகளுக்குக் குருநாதர் ஆற்றங்கரையில் கதுமென எதிர் பாராத நிலையில் காக்ஷியளித்தது சுவாமிகள் உள்ளத்தில் அன்பு பெருக்கெடுத்தது. அதன் வாயிலாகச் சுவாமிகள் அருள்பாடல் அருளிச் செய்தார்கள். இவ்விதம் ஊற்றெடுக்கும் உள்ளங்கொண்ட சுவாமிகள் ஆண்டவன் அருளை நிரம்பப் பெற்று அடியார்களைத் தம்போல் உய்விக்கும் விதத்தை நாடலானார்கள்.

ஊரெங்கும் புகழ்ச்சி

அடியார்களுக்கு வேண்டியது வேண்டியபடி நடத்த ஆண்டவன் கருணையே துணைகொண்டு சுவாமிகள் தம்மிடம் மன்றாடிக் கேட்போருக்குக் கடவுளின் திருவடியான திருநீறு கொடுத்து வருவார்கள். மக்களுக்கு எவ்வித காரியங்கள் நடக்கவும் இடஞ்சல்கள் தீரவும் திருநீறே மருந்தும் துணையுமாயிருந்து வந்தது. இதனால் சுவாமிகளது பெருமை நகரின் பல பக்கத்தும் பரவி மிளிர்ந்தது.

ஆன்ம பூஜை

நம் குருநாதர் ஆண்டவன் அருளை நினைந்து உள்ளம் நைந்து உருகி ஆண்டவனோடு ஒன்றித்திளைத்து

னின்றார்கள். இதன் பயனாக மௌனம் ஏற்று நடந்து வந்தார்கள். தமது வெளி இயக்கங்களை ஒடுக்கி வந்தார்கள். உண்ணாது உறைந்தார்கள். அவசியமாயின் இரண்டொரு சொல் எழுதித் தெரிவிப்பார்கள். தாம் வேலை பார்த்துவந்த கடையில் இவ்விதம் சுவாமிகள் மௌனமேற்று உண்ணாது இருத்தலைக் கடை முதலாளியும் மற்றோரும் கண்டு மனது வருத்தம் கொண்டார்கள். கடை வியாபாரத்துக்கும் தடையாக இருந்தது. சுவாமிகளிடத்தில் சென்று ஸ்நானம் செய்யவில்லையா? உடம்புக்கு என்ன செய்கிறது. என்று கேட்டால் சிரிப்பதும், கண்ணைமட்டும் விழித்துப் பார்ப்பதும், தலையை அசைப்பதுமாக இருந்தார்கள். இவ்வித மாறுதலான செயலைக் கண்டவர்கள் சுவாமிக்குப் பயித்தியமாக மாறிவிட்டது என்று பேசலானார்கள். நம் குருநாதர் யாரும் காணாமுறையில் மதுரையை விட்டுப் புறப்பட்டார்கள்.

மதுரையில் சுவாமிகளைக் காணாது கடைக்காரரும் அடியார்களும் வருத்தம் அடைந்தார்கள். சுவாமிகள் பத்தினியாரும் அண்ணார் பிள்ளையான பிச்சாண்டியா பிள்ளையும் நாட்டின் பல பக்கங்களிலும் தேடி அலைந்தார்கள். சுவாமிகளைக் காணவில்லை ஆதலால் மதுரையை விட்டுச் சொந்தவூரான இரெட்டியபட்டிக்குப்போய்விட்டார்கள்.

பொதிகை வாசம்

மதுரையை விட்டதும் சுவாமிகள் திருச்செந்தூர் அடைந்தார்கள். அவ்விடம் முருகன் தெரிசனம்

கிடைத்ததை உன்னி ஆனந்மேலிட்டு அவ்விடமிருந்தார்கள். பிறகு ஆண்டவன் ஆணைப்படி பொதிகை மலையை அடைந்தார்கள்.

திருக்குற்றாலத்தை அடைந்து ஆண்டவன் தெரிசனம் செய்துகொண்டார்கள். உடையவன் கணக்கின் படி மலைமீது சென்று சண்பகமாதேவி என்னுமிடத்தில் மறைவான குகை ஒன்றில் மனதை அடக்கி அமர்ந்துவிட்டார்கள்.

குருநாதர் தவமியற்றின குகையானது மிக்க வனப்பும் இயற்கை அழகையும் உடையது. உள்ளத்தை ஒரு வழிப்படுத்தும் தன்மையுள்ளது. திருக்குற்றால நீர் வீட்சியிலிருந்து தென்மேற்காய் சுமார் இரண்டு மைல் தூரம் உடையது. திருக்குற்றாலத்துப் பெரிய கோயிலுக்குப் பின்பக்கமாக, மேற்கு நோக்கிக் காட்டிலாகாசாலை போகிறது. வழியில் சம்பாதேவி என்ற கைகாட்டிப் பலகை தோன்றும். அவ்விடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்து செல்லும். ஒன்று தெற்கு நோக்கி மலைமீது செல்லும் மற்றொன்று முன் காட்டிலாகா பாதையாக தொடர்ந்து செல்லும். தெற்கு மலைமீது செல்லும் பாட்டையின் வழியாக அரைமைல் தூரம் சென்றால் மற்றொரு கைகாட்டிப் பலகை தோன்றும். இடப்புறமாக பாதை பிரிகிறது. அங்கிருந்து நேர் கிழக்கே நடந்தால் இருபக்கமும் அடர்ந்த சோலைகள். சாலையில் ஏற்றம் இரக்கமாக இருக்கும். முதலில் சண்பகமாதேவி ஆலயம்

சில மடங்கள் தெரியும். அதற்கு அப்பால் அருவியும், அதன் தலையின் உயரத்திலிருந்து விழும் நீர் வீட்சியும் இருக்கிறது. நீர் வீட்சிக்கு வடபுரம் ஒரு மண்டபத்தை ஒட்டி சுவாமிகள் தவமியற்றிய குகை இருக்கிறது. குகையின் வாயில் சற்று உயரத்தில் இருக்கிறது. படிக் கட்டுகள் வழியாகச் செல்லவேண்டும். வாயிற்படியண்டை சென்று பார்த்தால் குகையின் உட்புரம் இரண்டு பிரிவாகத் தோன்றும். இருட்டாக இருக்கும். நமது குருநாதர் இந்தக் குகையில் மிக்க அவாவோடு ஆண்டவன் அருளைப்பெற தவமிழைத்தார்கள். அதன்படி ஆண்டவன் அருளையும் பெற்று வந்தார்கள். உடையவன் திருவடிகளில் சிந்தையை நாட்டி நிஷ்டைகூடியிருந்தார்கள்.

சுவாமிகள், உடையவர் உண்டு தாம் உண்டு என்ற நிலையில் ஆண்டவன் பூர்ண அருளை நாடி மனமுருகி அழுகையாய் அழுது தவமியற்றி அருளைப் பெற்று இரெட்டியபட்டி சேர்ந்தார்கள்.

மலையை விட்டு ஊர் சென்றதும், அடியவர்கள் சுவாமிகள் வந்திருப்பதை யறிந்து வந்து தெரிசித்துப் போயினர். உள்ளூர் வாசிகளும் சுவாமிகளை நாடினார்கள். மதுரையில் நடந்ததைவிட இரெட்டிய பட்டியில் விஷயங்கள் மிக்க அற்புதமாக ஆண்டவன் ஆணைப்படி நடந்தேறியது. அடியார் கூட்டம் நிறைந்து விடுவதனால் வீட்டில் இடம் போதவில்லை. சுவாமிகள் இதைப்பற்றி சிந்தனை செய்தார்கள். இந்தச் சிந்தனையோடு அடியார்

சிலருடன் கண்மா பக்கம் உலவச் சென்றார்கள். அவ்விடம் உலவிவரும்பொழுது சுவாமிகள் கண்ணில்பட்ட ஒரு கல்லை, கூடயிருந்த அடியார்களைக்கொண்டு புரட்டச் சொன்னார்கள். அது மிக்க அழகிய கணபதியின் உருவமாகயிருந்தது. அதற்குக் கோயில் கட்டி சித்தி விநாயகர் என்ற பெயருமிட்டார்கள். வந்தனை வழிபாடுகள் உற்சவங்கள் வெகு விமர்சையாக நடைபெற்றன. சுவாமிகள் இந்தக் கணபதி ஆலயத்தில் தங்கி இருப்பார்கள். தாங்கள் எண்ணியகாரியம் கைகூடவும், பேய் கொண்டவர்களும், நோயாளிகளும், விஷத்தீட்டமானவர்களும் சுவாமிகளிடத்தில் விபூதிபெற்று யாவரும் நலமெய்திச் செல்வார்கள்.

இந்நிலையில் சுவாமிகளது தாயார் ஆண்டவன் திருவடியடைந்தார்கள். அவர்கள் குடும்ப வழக்கம்போல் தீயில் சுடவில்லை. சுவாமிகள் அபிப்பிராயத்திற்கு இணங்கி மண்ணில் புதைத்து சமாதி செய்யப்பட்டது. தாயாருக்குச் செய்யவேண்டிய கிரியை முடிந்ததும் சுவாமிகள் வீட்டில் வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்கள். அவ்வளவுதான் பிறகு ஸ்னானமோ ஆகாரமோ இடையாது. சுத்தமௌனம் கொண்டார்கள்; ஒரு மண்டலம் ஆயிற்று.(நாற்பத்தி ஐந்து நாள்) சுவாமிகள் கண்விழித்துக்கூட பார்க்கவில்லை. ஊரில் உள்ள ஒருவர் செய்த தொந்தரவினால் கண்விழித்துப் பார்த்தார்கள். எழுந்தார்கள்; யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. இடையில் கட்டிய

வேஷ்டியைக் கிழித்தார்கள். வீட்டைவிட்டு வெளியேறி ஞர்கள். எங்கோ சென்று விட்டார்கள். இரெட்டியபட்டி யில் சுவாமிகளைத்தேடி அலைந்து யாவரும் சுவாமிகளைக் காணுது வருத்தமுற்ருர்கள். சுவாமிகள் பொதிகை மலையை நாடிச் சென்ருர்கள்.

பூரண அருள் பெறல்

இரெட்டிய பட்டியில் யாவரும் இப்படி தேடிக் கொண்டிருக்க, சுவாமிகள் யாவருக்கும் அருள்பாலிக்க, பொதிகை மலையிலே நிர்விகல்ப்ப சமாதியிலே அமர்ந் தார்கள். பிற்காலத்தில் சுவாமிகள் அடியார்களைத் தவ நிலைகாட்ட அழைத்துச் சென்ற காலத்தில் இந்தக் குகை யில்தான் தாம் தவமாற்றியது என்று சொல்லியிருக் கிருர்கள்.

சுவாமிகள் சுத்த நிருவிகற்ப சமாதியிலமர்ந்து ஆண்டவன் பூரண அருளைப் பெற்ருர்கள். உலகத்தார் மீது இரக்கங்கொண்டார்கள். அவர்கள் உயர் நிலை அடைந்து உய்யும் வண்ணம் சட்டங்கள் ஏற்படுத்தி ஞர்கள். தான் அடைந்த பேற்றை இவ்வுலகம் பெறக் கருதிஞர்கள்.

குருநாதர் இயற்றிய சட்டம்

---:o:---

நம் சுவாமிகள் பொதிகை மலையில் தவம்செய்து ஆண்டவன் அருளைப் பூரணமாகப் பெற்றபின், உலகத்தில் உள்ள மக்கள் யாவரும் நல்ல நிலைமையை அடைந்து சுகித்திருக்கும் வழியைத் தேடலானார்கள். இக்கலிகாலத்தில் மக்கள் பலவிதத்திலும் துன்பத்தை அடைகிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். வறுமைப் பிணியினால் வருந்துகிறார்கள். உலகத்தில் அடைய வேண்டிய பயன் எவ்வளவு இருந்தும் அந்தப் பயனை அடைய முடியாதபடி கவலைப்படுகிறார்கள். உலகத்தில் மக்கள் அடைய வேண்டிய பொருள்கள் மூன்று. இந்த மூன்று பொருள்களையும் மக்கள் அநுபவிக்க வேண்டும். இந்த மூன்று பொருள்கள், அறம், பொருள், இன்பம். இந்த மூன்று பொருள்களையும் அடைய ஒருவகைத் திட்டம் வேண்டும். அந்தத் திட்டமே, சுவாமிகள் ஏற்படுத்திய சட்டம். இந்தச் சட்டத்தின்படி மக்கள் நடக்கும்படி திட்டம் செய்யவேண்டும். மக்கள் இந்தத் திட்டங்களை அநுசரித்துச் சட்டம் தவறாமல் நடந்துவரவேண்டும். இதில் குறைபாடுகள் எதுவும் ஏற்படாவண்ணம் நடந்து வருவதற்கு ஆண்டவனிடம் நம் குருநாதர் அழுகையாய் அழுது அரும் பாடுபட்டு இந்தச் சட்டத்தை மக்கள் அனுபவிக்கும்படி இயற்றித் தந்தனர்.

இந்தச் சட்டம் மக்கள் அனுபவித்துப் பலன்கள் அடைவதற்கு ஏற்ற வழியாக இருக்கிறது. உலகத்தில் நாம் சட்டம் என்பதை அறிந்திருக்கும் முறையில் அரசியல் சட்டம் ஒன்று. இயற்கைச் சட்டம் இரண்டாவது. நமது சுவாமிகள் சட்டம் மூன்றாவது. இந்த மூன்று வகைச் சட்டங்களின் கொள்கைகள்.

முதலாவது அரசியல் சட்டம் ஏற்படுத்தியிருப்பது; சட்டம் தவறி யாரும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால் சட்டப்படி அரசாங்கம் தண்டனை செய்யும். இதன்படி சட்டம் தவறின யாவரும் தண்டனை அடைவது கிடையாது. அரசியல் நோக்கத்துக்கு ஏற்றபடி தண்டனை கிடைக்கிறது. இந்தச் சட்டத்தின்படியே நடப்பது என்ற நியதியில்லை.

இரண்டாவது இயற்கைச் சட்டம் என்பது. நெருப்பு, விளக்கு, இவைகளை அளவுடன் நியதிப்படி நாம் உபயோகிக்கவேண்டும். அன்றி அதைத் தொட்டால் சுட்டுத் துன்புறுத்தும். ஆதலால் அதனிடம் முறை தவறாமல் நடந்து கொள்கிறோம். மின்சாரம் நாம் பணம் கொடுத்து வைத்திருப்பது என்றால் அதைக் கையினால் தொட முடியாது. தொட்டால் உயிரை எடுத்துவிடும். இதைத் தொடாமல் திட்டத்தில் கண்டபடி அனுபவிக்கவேண்டும். மேல் கண்ட அரசியல் சட்டத்திற்கு இயற்கைச் சட்டம் மேன்மையுடையது. நியதி தவறாமல் நடக்க இருப்பது. இதுபோலவே சுவாமிகள் சட்டம் மிக்க நேர்மை

யுடையது. மக்களைத் தன் வழிப்படுத்தி நடத்தும் தன்மை யுடையது. அதனால்தான் சட்டம் என்று சுவாமிகள் பெயர் கொடுத்தார்கள்.

சட்ட திட்டங்கள்

1. தெய்வக் கொள்கை:—ஒவ்வொருவரும் இது வரையில் தாம் அனுசரித்து வந்த தெய்வத்தை அல்லது புதிதாகக் கற்பித்துக்கொண்ட தெய்வத்தையோ வழிபாடு செய்யவேண்டும். ஆனால் மற்ற தெய்வத்தினிடையோ மனமாற்றம் வெறுப்பு கூடாது. ஆண்டவன் ஒருவர். மக்கள் பல வழியில் பல பெயரிட்டு தெய்வ வணக்கம் புரிகின்றனர். யாவும் ஆண்டவனாகிய ஒருவனுக்கேதான் உரியது. சட்டத்தை மேற்கொள்ளும் யாவரும் எந்தச் சமயத்தராய் இருந்தாலும் அந்தச் சமயத்தின் மூகூர்த்தந் தனை வழிபடலாம். கடவுள் ஒருவர்; எவ்விதத்தில் வணக்கம் புரிந்தாலும் அவ்வண்ணம் நின்று கோரும் பொருளைக் கூட்டுவிக்கும். குருநாதர் கொள்கையும் இதுவேயாகும்.

2. நீராடல்:—சட்டத்தில் சேர்ந்த யாவரும் விடியல் மூன்று மணிக்கே குருநாதா என்று விழித்தெழுந்து விரைந்து சென்று மலசல விஸர்ச்சனங்களை முடித்து, ஆற்றிலோ, கிணற்றிலோ, குளத்திலோ மற்ற எந்த இடத்திலோ குளிர்ந்த ஜலத்தில் நீராடல் வேண்டும். வெந்நீர்

ஸ்நானபானங் கூடாது. அரை ஸ்நானங் கூடாது என்று ஆண்டவன் கட்டளை.

3. வந்தனை வழிபாடு:—குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் முடித்து வழக்கம்போல் நெற்றிக்கு அணிந்து விநாயகர் கோயிலை மூன்று பிரதட்சணம் செய்து வணங்கவேண்டும். அல்லது ஆண்டவன் படைப்பான தனிமரங்களை வழிபடலாம். ஆண்டவனை மனனம்செய்து தாமே மூன்று பிரதட்சணம் செய்து வழிபாடு செய்யலாம். உருவங்களை வீட்டில் அமைத்து வழிபாடு செய்யலாம். இவ்வழிபாட்டிற்கு எவ்வித மந்திரமும் ஜெபமும் கிடையாது. ஆண்டவனை மனனம் செய்து தோத்திரம் செய்ய வேண்டுமென்பது குருநாதர் வாக்கு.

4. ஆகாரம்:—மரக்கறி உணவு கொள்ளுதல் வேண்டும். இதுவே சன்மார்க்கம் ஆகும். மற்ற உணவுகளும் மதுபானங்களும் எக்காலத்திலும் கூடாது. மாமிச ஆகாரம் விலக்க முடியாதவர்கள் ஆண்டவனை வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். நாளடைவில் அவ்விதமே சௌகரியமான உணவு அருந்தப் பழக்கம் ஏற்பட்டுவிடும்.

5. பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்துவிடவேண்டும். ஐந்து பெரிய பாதகங்களாவன: கள் குடித்தல், பொய் பேசுதல், ஆசைப்படுதல், கொல்லுதல், திருடுதல்; இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

6. வெள்ளி விரதம் சட்டத்திற்கு மிக்க அவசியம். உலகத்திலுள்ள எவ்வித கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்ளும் தன்மையுடையவன் மேலுக்கு வந்துவிடக் கூடியவன் ஆவான். சுவாமிகள் எத்தனையோ நாட்கள் உணவு இல்லாமல் இருந்திருக்கிறார்கள். இக்காலத்திலும் குருநாதர் அடியவர்களுக்குக் காட்சி பிரமாணமாக ஆகாரச் சுருக்க முறைகளை மிக அற்புதமாகக் குறிப்பித்து வருகிறார்கள். அவ்வாறே அடியவர்கள் நடந்து கைமேல் பலன் கண்டு குருநாதருடைய பேரருளைப் போற்றுகின்றனர். விரதங்களைச், சிறிது பலகாரத்தோடும், ஒரு வேளை ஆகாரத்தோடும் அடியவர் தகுதிக்கேற்பவும் நடத்திவர வேண்டும்.

7. மருந்து:—எந்த வியாதிக்கும் மருந்து அருந்தக் கூடாது. அது ஆண்டவன் ஆணைக்கு நேர் விரோதமாகும். மக்களுக்குள்ள வினையை வளர்க்கும். எந்த வியாதி ஏற்பட்டாலும் விஷங்கள் தீண்டினாலும் உடன் காலந்தாழ்த்தாது சுத்த ஜலத்தில் ஸ்னானம் செய்ய வேண்டும். தீர்த்தம் திருநீறு உள்ளுக்கு சாப்பிடவேண்டும். மேற்பூச்சும் பூசவேண்டும். எவ்வித வினைக்கும் இவ்விதமே செய்யவேண்டும். ஆண்டவனை மனனம் செய்யலாம். இதுவே சட்டதிட்டம். வியாதிகள் அதிகரித்த காலத்தில் காலை மாலை இரண்டு காலத்திலும் சுத்த ஜலத்தில் ஸ்னானம் செய்யவேண்டும். உலகப் பழக்கம்

பலவாறாகயிருந்தும் சட்டத்தின் கொள்கைப்படி உறுதியாக ஆண்டவன் அருளைத் தியானித்து நடந்து வர வேண்டும்.

திருநீறு தீர்த்தம்:—தினசரி ஸ்நானம் முடித்து வர்தனை வழிபாடு செய்து தீர்த்தம் அருந்தவேண்டும். சுத்த ஜலத்தில் திருநீறு போட்டுத் துளசிதளம் போட்டு அருந்த வேண்டும். மிக்க நோயுற்ற காலத்திலும் பிரசவ காலத்திலும் ஆண்டவனைக் கொலுவைத்து வழிபடுங்காலத்திலும் தீர்த்தம் திருநீறு முறைப்படி அருந்தவேண்டும்.

8. கோலு அமர்த்துதல்:—நம் குருநாதரையும் ஆண்டவரையும் கொலு அலங்கரித்து அதில் அமரச் செய்து பிரதட்சணம் செய்து வணங்கவேண்டும். காலை, மாலை இரு வேளைகளிலும் இவ்விதம் வணக்கம் புரிதல் வேண்டும். பிணியுற்றவர்களோ பிரசவித்தவர்களோ பிரதட்சண வலம் செய்ய முடியாத காலத்தில், அவர்களுக்கு உரித்தானதாக மற்றவர் யாரும் வலம் வந்து வணக்கம் செய்யலாம். பிரசவகாலங்களில் நோய் எதுவும் இல்லாது இருக்கும் காலத்தில் காலை ஒரு வேளை ஸ்நானம் போதுமானது. நோய் ஏதாவது ஏற்பட்டிருந்தால் காலை மாலை இரண்டு காலத்திலும் நீராடவேண்டும்.

9. கடவுளே கதி:—உலகத்தில் பிறந்த யாவரும் வாழ்ந்து வருவதற்கு ஒருவர்க்கு ஒருவர் துணையாக உதவி புரிதல் வேண்டும். இப்படி ஒருவர்க்கு ஒருவர் பரஸ்பரம்

ஏற்படுவது ஆண்டவன் கருணையால்தான். அதனால் யாவரும் கடவுளே கதி என்று உறுதியாக நம்பி நடந்து வரவேண்டும். மணி மந்திரம், ஔஷதம், ஆண்டவன் பிரார்த்தனை (நேர்த்திக் கடன்) செய்வது கூடாது. செத்தார்க்குத் தீயிடல்கூடாது; சமாதி செய்தல்வேண்டும். அறமன்றம் அணுகாமை, இறந்தவர்க்கு இறங்காமை இவைகள் சட்டத்தின் திட்டங்களாக குருநாதரால் கையாளப்பட்டு வந்தவை ஆகும்.

10. ஞான நிஷ்டை:—சட்டத்தின் முக்கியமான பகுதிகளில் இது ஒன்று. சுவாமிகளது உருவம் படத்தில் இருப்பதுபோல் சாதாரண சப்பளமிட்டு உட்கார்ந்திருப்பது. ஆண்டவனிடம் மனதை பதிய வைப்பது. குருநாதரையே தியானித்து அடியவர்கள் நிஷ்டை அமர்ந்து வருகிறார்கள். இரண்டு மணி நேரம் வரையில் நிஷ்டை யமர வேண்டும். காலை நீராட்டத்திற்குப் பிறகும் இரவு படுக்கைக்குப் போகுமுன்பும் நிஷ்டையமர்வது முறையாகக் கொள்ளப்பட்டு வருகிறது. குருநாதர் நிஷ்டையமருவதற்கு இடம், நேரம், இன்ன முறையாக உட்காருவது என்று திட்டம் செய்யவில்லை. மனதை ஒரு வழிப்படுத்தி ஆண்டவனை எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நிஷ்டை அமரலாம் என்பது சுவாமிகள் கட்டளை.

ஆண்டவனை மனதில் எண்ணி தியானம் செய்யும் காலத்தில் நமக்கு ஏற்படும் குறைபாடுகளை ஆண்ட

வனிடம் முறையிட்டு விலக்கிக்கொள்ள வேண்டும். ஆண்டவனை நினைந்து முறையிட்டுக் கொண்டே உள்ளம் உருகிச் சொல்லவேண்டும். தம்மை மறந்து "தூங்காமல் தூங்குகின்ற நிலைதானே வரும் "இந்நிலையை அடைவதற்கு ஆண்டவன் தியானத்தைத் தவிர வேறு முயற்சி ஏதும் தேவையில்லை. சாதாரணமாக நிஷ்டை அமரக் கூடியவர்களையும் இந்த நிலைதானே வந்து கூடுகிறது. இது உயிருக்கும் உடலுக்கும் இன்பம் தருகின்ற ஒப்பற்ற நிலையாகும்.

சட்டத்தில் உள்ளவைபோல் நடவாமல் தவறி நடந்தால், அதன் குறிகள் நமக்கு தோன்றுவதாக சரீரத்தில் உபாதி தோன்றும். தன் குற்றம் உணர்ந்து ஆண்டவனைத் துதி செய்தால் கதுமென உபாதி நீங்கும். இப்படியல்லாமல் சட்டத்தை மீறிச் செய்யும் காரியம் கை கூடாமல் போகவைத்து குற்றத்தினின்றும் தடுத்தாட் கொள்வதும் உண்டு. இப்படி தடுத்தாட் கொள்வதும் உடையவன் பெருமையே யாகும்.

சட்டத்தின் பயன்:- சட்டத்தை இவ்வளவு திட்டமாக வகுத்து, உலக மக்கள் யாவரும் இதனை அனுபவித்து பயன் பெறவேண்டும் என்று சுவாமிகள் திருவுள்ளம் கொண்டு செய்து வைத்தார்கள். சட்டத்தில் சேர்ந்த யாவரும் தன் அனுபவத்தில் அறிந்து நடக்கும் சில முறைகள். தான் சட்டத்தில் சேருமுன்பு தாங்கள்

எவ்வளவு தங்கள் வாழ்க்கையில் சிரமப்பட்டு வந்தாலும். அந்தச் சிரமங்கள் யாவும் மறைந்து சௌகரிய மேலிட்டு உலகவாழ்க்கை நடத்தி வருவதைத் தாமே அறியலாம். பிறரும் இதைக் காணலாம். அவ்விதம் கண்ட ஒவ்வொருவரும் தாமே சட்ட அனுட்டானத்தில் சேர்ந்து அதன் பயனை அடைவார்கள். சட்டத்தின் ஒரு பகுதியை மட்டும் ஏற்று நடப்பவர்கள் காலத்தில் சட்டத்தின் முழுத் திட்டங்களையும் ஏற்று நடந்து வருவார்கள். சட்ட அனுட்டான முடையவர்கள் அனைவர்க்கும் மேலாய்த் தூய நல்ல உலக வாழ்வினை அடைந்து வருவார்கள். ஆண்டவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்தவர்களாய், பிறவா நெறியைப் பெறுவது உண்மை என்று கண்டவர்களாய், "பெற்ற சிற்றின்பமே பேரின்பம் ஆம் அங்கே" என்றும் உண்மையுணர்ந்து உடல் எடுத்ததன் இம்மைப் பயனையெல்லாம் இவ்வுலகிலே பெற்று தூய நல் இன்ப வாழ்வு பெற்று வாழ்வார்கள். சட்டத்தில் பயிற்சி பெற்ற அடியவர்கள் அடையக் கூடியது "உடையவனிடம் உலுக்கலாகாத உறுதிகொள்வது" இயற்கையாகும். வாழ்க்கையில் தமக்கும் மற்றார்க்கும் வழிகாட்ட யாரையும் அடைந்து தெரிய வேண்டுவதில்லை. சந்தேகித்து இடர்பட வேண்டியதில்லை. தாமே பிறர்க்கு எடுத்து விபரங்கள் சொல்லும் தன்மையுடையவராவார்கள்.

இப்பிறவியில் அடையும்பேறு:— உலக மக்கள் யாவரும் அடையவேண்டிய முக்கியமான பயன் இம்மை இன்பம், மறுமை இன்பம். இரண்டு சட்டப்பயிற்சி ஆரம்பித்தது முதல் இம்மையில் (இப்பிறவியில்) தாம் அடையக்கூடிய உலக வாழ்க்கையில் எந்தக் காரியங் களுக்கும் முட்டுப்பாடின்றி இன்பமயமான வாழ்க்கை நடத்தி வரும்படிக்கு ஆண்டவன் கூட்டிவைப்பார். மறுமைப் பயன் அடைவதிலும் "இப்பிறவி ஒழிந்தால் மறு பிறவி அடையா வண்ணம், சிறந்த முறை இல் வாழ்க்கையை நாம் நடத்தி வரவேண்டும் என்பது சுவாமிகள் எண்ணம். இப்படிச் சொல்வதென்றால் முற்றத் துறந்து சந்நியாசம் மேற்கொண்டு நடத்துவது என்பதல்ல. சுவாமிகள் கூட கடைசிகாலம் வரை உலகத் தாரைப் போன்று நான்கு முழம் வெள்ளை வேஷ்டி அணிந்த சுவாமிகளாக மக்களுக்கு வழிகாட்டி மறைந் தருளினார்கள்.

சுவாமிகள் சமாதி நிலை:—குருநாதர் இவ்விதமான சட்டங்கள் ஏற்படுத்தினார்கள். மக்கள் அதன் முறைப்படி படி நடந்து வந்தார்கள். உலகத்தில் முட்டுப்பாடு ஏதும் இன்றி சுகமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். மூன்று தடவை சுவாமிகள் நிருவிகற்ப நிஷ்டையில் இருந்தார்கள். கடைசி நிருவிகற்ப நிஷ்டை இரெட்டிப் பட்டியில் முடிவுற்றது. துந்துபி௵ மார்கழிமீ இருபத்தி எட்டாந்

தேதி சுக்கிரவாரம் அனுஷநட்சத்திரம் இரவு நான்கு மணிக்கு ஆண்டவனோடு ஒன்றி இரண்டறக் கலந்தார்கள். உடன் இருந்த அடியவர்கள் குருநாதர் பிரிவை ஆற்றாது வருந்தினார்கள். மற்ற அடியார்களுக்கு உடன் தந்தி, தபால்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. சுவாமிகள் "உதித்த இடத்திலேயே ஆண்டவனோடு மறைந்தருளினார்கள்." அதே இடத்தில் திருமேனி திருக்காப்பு செய்யப்பட்டது. மறைந்து ஐந்து நாட்கள் சென்று தைமீ ௩உ செவ்வாய்க்கிழமை பூராட நக்ஷத்திரத்தில் மஹா அபிஷேக அலங்காரத்துடன் அடியார்களால் திருமேனி திருக்காப்பு செய்யப்பட்டது. ஆண்டு தோறும் மார்கழி கிருஷ்ணபட்ச அனுஷ நட்சத்திரத்தில் குருநாதருக்குக் குரு பூசை ஆராதனை அடியார்களால் நடந்தேறி வருகிறது.

குருநாதர் மறைந்த இக்காலத்திலும் அடியவர்களை அருளால் ஆளும் பெருந்தொழிலை ஏற்று நடத்தி வருகிறார்கள். குருமூர்த்தியின் வாக்குப்படி சட்ட அனுட்டானம் நாளுக்குநாள் அதிக விளக்கமுற்று வருகின்றது. உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவர்கள், பிற உத்தியோகஸ்தர்கள், பெருத்த வியாபாரிகள், சிறந்த மிராசுதார்கள், நகர வாழ்க்கையுடையவர்கள், நாட்டுப் புறங்களில் வசிப்பவர்கள், பணமுடையோர்கள், ஏழைகள், மேல் குலத்தவர், தாழ்குலத்தவர், வயோதிகர், குழந்தைகள் என்று சொல்லக்கூடிய யாவரும் ஜாதிமத வேற்றுமை

பன்னியில் ஆண், பெண் இரு தரப்பினர்களும் இந்தச் சட்ட அனுட்டானத்தில் இருந்து ஆண்டவன் இன்னருளைப் பெற்று ஆனந்த வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

அடியார்கள் வாழ்க்கை:—இப்படி வாழ்க்கை நடத்தி வருபவர்களில் தலை சிறந்த அடியார்களான, திருக்கோயிலூர் தாலூகா திருவெண்ணைநல்லூர் போஸ்டைச் சேர்ந்த திருசாத்தனூர் அருள்கொடி விலாஸ் ஸ்ரீலஸ்ரீ அருள்கொடி ஸ்வாமிகள் சந்நிதானமும் பிரஞ்சு இலாகா புதுவை நகர் பிள்ளையார் குப்பம் அருள் சக்தி விலாஸ் ஸ்ரீ அருள் சக்தி அன்னை சன்னிதானமும் தலை சிறந்து விளங்கி நிற்கின்றது. சட்டத்தில் உள்ள அடியார் பலரும் மற்றவர்களும் மேற்கண்ட சன்னிதானங்களில் தங்களுக்குள்ள முட்டுப்பாடுகளைத் தெரிவித்து அவர்களால் ஆண்டவன் இன்னருள் விதத்தை நாடி மேன்மை அடைகின்றார்கள். ஒரு தனி உலகிற்குக் கர்த்தாவான ஆண்டவன் அவர்கள் மூலம் இன்னருள் பாலிப்பதை அடியார் யாவரும் அறிந்த விஷயங்களாகும். இந்த விதமாக ஆண்டவன் புகழ் யாவரிடமும் பரவும் படிக்குச் செய்யத் திருவுள்ளங்கொண்ட ஸ்ரீ அருள் சக்தி அன்னையின் ஆணைப்படிக்கும், ஸ்ரீலஸ்ரீ அருள்கொடி சுவாமிகள் ஆசியின்படிக்கும் இந்த நூல் எழுதப்பெற்றது.

அடியார்க்கடியேன் இந்த அரும்பெரும் தொண்டினை செய்ய எவ்வளவும் வல்லேனில்லை. ஆண்டவன் ஆணைப்

படி தாய் கொடுத்த அரும்பொருளைக் கொண்டு அடியவன் எழுதினேன். இதன் குற்றங்குறைகள் கண்ணுறும் ஆண்டவன் அடியவர்களான யாவரும் பொறுப்பார்களாக. இதனுடன் சேர்க்க விரும்பும் ஆண்டவன் அருளாட்சி விஷயங்களைத் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிடும் முயற்சியை ஆண்டவன் அளிப்பார். இதன் கீழ் அருள்கொடி விளக்கம் வாழ்த்து இவையுடன் இந்நூல் முடிவுறும். குருப்பியோ நம:

ஆண்டவன் திருக்கொடி

ஆண்டவன் திருக்கொடி பாரீர் அந்த
ஆண்டவனருளிய ஓங்கிய நிலையில்
சாத்தனூர் தனியரசாளும்—சன்மார்க்க
ஸ்ரீலஸ்ரீ அருள்கொடி *ஸ்வாமி சன்னதியில் (ஆ)
இரெட்டியபட்டி அடிகள்—இங்கு
இருந்து அருள்புரிந்தாக்கிய செல்வம் (ஆ)
காத்து உடையவன் கொடியை—நின்று
கண்டிட யாவர்க்கும் காட்டினன் பாரீர் (ஆ)
கண்டிடுவீர் அருள்கொடியை—கண்டு
பண்ணவர் தண்ணருள் பாலிக்கக்கொண்டே (ஆ)

"வாழ்க நின்பேரருள் வாழ்க நின்பேரருள்
வாழி இவ்வுலகத்தென்றும் வள்ளல் தன் நியதியெல்லாம்
வாழி இவ்வுலகத்தன்னான் வளம்பெறும் அடியாரெல்லாம்
வாழி என்னுளுமெய்மை வாழ்க நல்லறங்களெல்லாம்
வாழியப் பெரியோனும்ம் வாழியே வாழிவாழி."

ஓம் குருப்பியோ நம:

* அருட்கொடி விளக்கம்:—திருச்சாத்தனூர் அருட்கொடி விலாஸ் ஸ்ரீலஸ்ரீ அருட்கொடி சுவாமிகள் திருமாளிகையின்மீது அருட்கொடி ஏற்றியுள்ளது. குருநாதர் பிறந்த நக்ஷத்திரமான புரட்டாசி ரேவதி நக்ஷத்திரத்தில் அருட்கொடி விழா நடைபெறுகின்றது. யாவரும் கண்டின்புற ஆண்டவன் கருணை புரிவார்.

சட்டரகசியம்:—அடியார் நடந்துகொள்ள வேண்டியது. ஆண்டவன் அருட்திறத்தால் அடியவர்களிடம் நிகழ்ச்சிகள் ஏற்படும். அவற்றின் பொருள்களை யாவரிடமும் விரிவாகப் பேசுதல் கூடாது. தாம் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களைப் பயிற்சி பெற்ற அடியார்களிடம் தெரிவித்து விளக்கம் பெறுதல் வேண்டும்.

சுபம்.

———

TAMIL NADU ARCHIVES
112407

The M. L. J. Branch Press, Tirupuvanam, TDR. C. 1000